விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
Dishtv மற்றும்
அனைத்து ரிஸீவர்களும்
அதற்கான ரீசார்ஜ்களும்
மிக குறைந்த விலையில்
கிடைக்கும்.
SATS-TECH
சாட்ஸ் டெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4427)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 03 திங்கட்கிழமை (19.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335


## மைத்திரி - மகிந்த - ரணில் நேரில் சந்திப்பு

# அனைத்துக் கட்சி கூட்டம் இணக்கமின்றி முடிந்தது

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று மாலை இடம்பெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பு இணக்கப்பாடின்றி நிறைவு பெற்றுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)







## ஜனநாயகம் முச்சந்தியில் பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)

தற்போதைய மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை இரண்டு தடவைகள் நிறை வேற்றப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட பெரும் கலவர நிலைக் 23

## வவு.சிறைக்கருகில் ஹெரோயினுடன் இளைஞன் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா மத்திய சிறைச்சாலைக்குள் ஹெரோயின் போதைப் பொருளை கடத்த முற்பட்ட இளைஞனை நேற்று மாலை 2 மணியளவில் சிறைச்சாலை அதிகாரிகள் மடக்கி பிடித்து வவு 23

## இலத்திரனியல் முறையிலேயே வாக்கெடுப்பு அவசியம்

ஜனாதிபதி வலியுறுத்து



23

## இலங்கைக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயக பண்புகள் பின்பற்றப்படாவிட்டால், நிகழ் காலத்திலும், எதிர்காலத்திலும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்று அமெரிக்கா, இலங்கை அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதன்படி இலங்கையுடனான பாதுகாப்பு விடயங்களில் தாக்கங்கள் ஏற்படும் என்று தூதரகம் குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்கா, இலங்கை 23

## பண்ணைப் பகுதியில் வெடிமருந்து துண்டுகள் மீட்பு



23

## தமிழ்த் தேசியத்தில் பற்றுறுதி கொண்ட கட்சிகளுடன் கூட்டிணைந்து

# புதிய பொதுச்சின்னத்தில் போட்டியிடவே விரும்புகிறேன்

### பேரவைக் கூட்டத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் உரை

(யாழ்ப்பாணம்)

கொள்கை அடிப்படையில் நாம் ஒன்றாக செயற்படுவோம். எங்களுக்கிடையில் இருக்கின்ற முரண்பாடுகளை எமது மக்களின் நன்மை கருதி களைந்துகொள்ளுவோம். எமது கூட்டு வெற்றியை நம்பி செயற்படுங்கள். எம்முடன் ஒத்த கருத்துடைய யாவரும் இணையுங்கள். நாம் கொள்கையில் பற்றுறுதி கொண்டு செயற்படுவோம்.

இவ்வாறு வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள தமிழ் மக்கள் பேரவையின் தலைமை அலுவலகத்தில் நடந்த 13ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொண்டு 03

## கோரதீவு பகுதியில் மீனவரின் படகு விசமிகளால் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்குச் சொந்தமான 3 லட்சம் ரூபாய் பெறுமதியான படகு கோரதீவு இறங்கு துறையில் தரித்து நின்றபோது விசமிகளால் எரியூட்டப்பட்டுள்ளது. 23

## தமிழருக்கான தீர்வுக்கு இனி வாய்ப்புள்ளதாக நான் கருதவில்லை



சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடி தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கான முயற்சிகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 23

## பேரவை இணைத்தலைவராக தொடர்ந்தும் விக்னேஸ்வரன்

### பேரவைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களுள் ஒருவராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்ந்தும் இருப்பார் என தமிழ் மக்கள் பேரவை கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் 13 ஆவது கூட்டத்தொடர் 24

## நெல்லியடியில் குழப்பம் ஏழு பேர் கைது

(கரணவாய்)

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நெல்லியடி பிரதான வீதியில் உள்ள சிகையலங்கார நிலையத்தில் பொதுமக்கள் கூடும் நேரத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் அமைதிக்கு பங்கம் விளைவித்தமை தொடர்பில் ஏழு 24

## கேக் வெட்டி கொண்டாட்டம்



23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## படைத் தளபதிகளை நீதிமன்றுக்கு கொண்டு வந்த

# சிஐடி அதிகாரியை பதவி நீக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பில் 11 தமிழர்கள் கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் மாணவி வித்தியா படுகொலை வழக்கு விசாரணைகளை துணிச்சலுடனும் துரிதமாகவும் முன்னெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

கடற்படைத் தளபதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, பொலிஸ் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

அத்துடன், 2008- 2009 காலப்பகுதியில் 11 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகளைக் கைது செய்த பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா, விசாரணைகளைத் துரிதமாக முன்னெடுத்தார்.

கடற்படையின் முன்னாள் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி.தசநாயக்க இந்த வழக்கில் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் முக்கிய சந்தேக நபரான நேவி சம்பத் என அழைக்கப்படும் முன்னாள் கடற்படை அதிகாரி லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கைது செய்யப்பட்டார். கொழும்பு லோட்டஸ் வீதியில் போலி அடையாள அட்டையுடன் மாறு வேடத்தில் நடமாடிய நேவி சம்பத்தை நிசாந்த டி சில்வா நேரடியாகச் சென்று கைது செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் பொலிஸ் திணைக்களத்தையும் தனது பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வழக்கு விசாரணைகளை துணிச்சலுடனும் துரிதமாகவும் முன்னெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (மு)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப்போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.
(6492)



**காயத்திரி திருமாங்கல்ய சேவை**

திருமணம் பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.
(6492)


## யா/கொக்குவில்
## இந்து ஆரம்ப பாடசாலையின்
## பரிசில் தினம் - 2018


கடந்த 2018.11.16ஆம் திகதி நடைபெறவிருந்த எமது பாடசாலையின் பரிசில் தின நிகழ்வு அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டது.

இந்நிகழ்வு எதிர்வரும் 2018.11.20ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.
(C-4456)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
1957 - 02 - 24



மறைவு
2017 - 12 - 01

### அமரர் சிங்காரவேலு யோகநாதன்
**(உரிமையாளர் - Ogesta)**

ஆண்டுகள் ஒன்றல்ல ஆயிரம் ஆனாலும்
மறவாது உம் நினைவுகள்
நீங்கள் மீண்டும் பிறந்து வந்து
எம்மோடு வாழப்போகும் நாளுக்காக காத்திருக்கிறோம்.

185/1, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.
(6497)
தகவல்:- குடும்பத்தினர்
021 221 6742

## மரண அறிவித்தல்



### விஸ்வலிங்கம் மதிவதனராசா

கட்டுவன் மேற்கு, நாச்சிமார் கோவிலடி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் மதிவதனராசா நேற்று *(18.11.2018)* ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் விஸ்வலிங்கம் - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் மயில்வாகனம் - பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மருமகனும் உதயராணியின் அன்புக் கணவரும் மதுசூதனன், மதுகோபி, பிரமபத்தினி, மதுசுஜா, மதுனியா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மல்லிகாதேவி, அன்னலட்சுமி, சிறிஸ்கந்தராசா, புஸ்பராணி, மகேந்திரராசா, சந்திரகுலராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் உதயகுமார் (இலண்டன்), உதயமலர், கருணகுமார் (பிரான்ஸ்), ஆனந்தகுமார், சிவகுமார், சசிக்குமார் (சுவிஸ்), சசிகரன் (இலண்டன்), கிருஸ்ணகுமார், தர்சினி (பிரான்ஸ்), தனுசா (இலண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(19.11.2018)* திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
(C-4455)

கட்டுவன் மேற்கு,
நாச்சிமார் கோவிலடி, தெல்லிப்பளை.
தகவல்:- குடும்பத்தினர்
077 298 7899

## மரண அறிவித்தல்

### கந்தசாமி பரராசசேகரம்



ஒட்டறுத்தகுளம் மல்லாவியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு கிராம்புவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரராசசேகரம் 16.11.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி - தவமணி தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தலதாவின் அன்புக் கணவரும் கஜானி, கஜானன், கஜான் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்திமதி, தயாழுதி, தயாபரன், பிரதீபன், இந்திரநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவஞானசுந்தரம், அமிர்தானந்தசிவம், முருகானந்தன், அமிர்தநாயகி, சதானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(19.11.2018)* திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
(C-4457)

சாவகச்சேரி வடக்கு,
கிராம்புவில்.
தகவல்:- குடும்பத்தினர்

# புதிய பொதுச்சின்னத்தில்...

உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் ஆற்றிய உரை வருமாறு,

சென்ற மாதம் 24ஆம் திகதிய விசேட பெருங் கூட்டத்தின் பின்னர் இன்று கூடுகின்றோம். அன்று தமிழ் மக்கள் கூட்டணி என்ற அரசியல் கட்சியின் உருவாக்கம் பற்றி அறியத்தரப்பட்டது. அவ்வாறான உருவாக்கத்தின் பின்னரான சூழ்நிலை பற்றியும் தொடர்பு நிலை பற்றியும் இன்று பரிசீலிக்க வேண்டியுள்ளதாய் உள்ளது.


கட்சிகளின் சின்னங்கள் பல காலம் பாவிக்கப்படும் போது அவற்றுடன் அந்தந்தக் கட்சிகள் மேலுள்ள மதிப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன. புதிதாக கொள்கை அடிப்படையில் அரசியலில் உள்நுழைவோர், அந்தந்தக் கட்சிகளின் சின்னங்களுடன் சேர்ந்து தேர்தலில் ஈடுபட்டால் அல்லது அவற்றின் கீழ் அடையாளப்படுத்தப்பட்டால் அந்தந்தக் கட்சி சின்னங்கள் சம்பந்தமாக மக்களிடையே இருக்கும் நம்பிக்கைகளும், அவநம்பிக்கைகளும் புதிய கட்சியின் மேலும் பதிவன. அதன் பின்னர் சின்னத்தைத் தரும் அந்தக் கட்சியின் பொறுப்புக்களையும் இறந்த கால நிகழ்வுகளையும் புதிய கட்சி சுமை தாங்கிப் பயணிக்க வேண்டியிருக்கும். கொள்கைகளைப் பரப்ப வந்த நாங்கள் கடந்த கால கோபதாபங்களிற்கு ஆளாக நேரிடும். அதனால்தான் நாம் ஒரு பொதுவான சின்னத்துடன் அல்லது புதிய சின்னத்துடன் கொள்கைகள் சார்ந்து பயணிக்க வேண்டும் என்று எமது கட்சி பற்றி அபிப்பிராயம் தெரிவித்துள்ளேன்.

அடுத்து தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான எனது பொறுப்புக்கள் மீள் பரிசீலனை செய்யப்படவேண்டியுள்ளது. நான் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவராக இருந்த போதே தமிழ் மக்கள் கூட்டணி என்ற அரசியல் கட்சியின் ஸ்தாபகராகவும் செயலாளர் நாயகமாகவும் மாறியுள்ளேன். நான் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவராக கடமையாற்றலாமா என்பதை உங்கள் பரிசீலனைக்கு விடுகின்றேன்.

எமது கட்சியின் அரசியல் குறிக்கோள்கள் பேரவையின் அரசியல் குறிக்கோள்களுக்கு மாறுபட்டதன்று. எமக்குள் நலவுரித்து முரண்பாடுகள் எழ வேண்டிய அவசியமில்லை. (Conflict of interests). ஆனால் பேரவையில் ஏற்கனவே இடம் பெற்றிருக்கும் கட்சிகளுக்கும் எமக்கும் கொள்கை அளவில் மாறுபாடுகள் இருக்கலாம். உதாரணத்திற்கு கௌரவ சித்தார்த்தன் அவர்களின் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தே செயலாற்றி வருகின்றது. அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை நான் ஏற்க முடியாததால்தான் நான் அதிலிருந்து வெளியேறினேன். அந்த வகையில் கௌரவ சித்தார்த்தனுடன் எமக்கு கொள்கை ரீதியான முரண்பாடுகள் இருக்கலாம். அதே போல் கூட்டமைப்பில் இணைந்திருக்கும் மற்றைய அரசியல் கட்சிகளின் நலன்களுடன் எமக்கு முரண்பாடுகள் எழக்கூடும். ஆனால் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்களின் கூட்டு சேர்ந்த இயக்கத்தில் இருந்து வெளிப்பட்டுள்ள தமிழ் மக்கள் கூட்டணி பேரவையுடன் கொள்கை ரீதியாக முரண்பாடுகளை எதிர்நோக்கக் காரணங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுசரணையுடன் முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளப்பட்ட நான் குறித்த பதவி முடியும் வரை தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவராகக் கடமையாற்றி வந்துள்ளேன். முரண்பாடுகள் எழவில்லை. அரசியல் முன்மொழிவுகள் அரசாங்கத்தின் முன் தமிழ் மக்கள் பேரவையினாலும் முன்வைக்கப்பட்டன. நான் அங்கம் வகித்த வடமாகாண சபையினாலும் முன்வைக்கப்பட்டன.

எது எவ்வாறு இருப்பினும் நான் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவராகக் கடமையாற்றலாமா என்பது பற்றி உங்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்.

அடுத்து பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் கடந்த கால தேர்தல் செயற்பாடுகள் பற்றி ஆராய வேண்டியுள்ளதாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் பேரவையுடன் ஒருமித்த கொள்கைகள் கொண்ட கட்சிகள் சில தமக்குள் முரண்பட்டுள்ள ஒரு நிலை இன்று காணப்படுகிறது. அவற்றைத் தீர்ப்பது அந்தந்தக் கட்சிகளின் சவாலும் பொறுப்பும் ஆவன. அந்த முரண்பாடுகளுக்கான காரணம் பொதுநலம் என எடுத்துக்காட்டப்பட்டாலும் கட்சி நலம் கலந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆகவே தமிழ் மக்கள் பேரவையோ தமிழ் மக்கள் கூட்டணியோ அந்தக் கட்சிகளின் முரண்பாடுகளை தமக்குள் ஈர்க்க வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. அவர்களின் முரண்பாடுகளை மனதில் வைத்தே எமது கூட்டணி சுதந்திரமாகப் பொதுச்சின்னம் ஒன்றில் கட்சி அரசியலில் நுழையத் தீர்மானம் எடுத்துள்ளது. மற்றைய கட்சிகள் மற்றும் இயக்கங்கள் கொள்கை அடிப்படையில் எம்முடன் தேர்தல் உடன்பாடுகள் வைத்துக் கொள்ளலாம்.



எமது அங்கத்துவக் கட்சிகளின் முரண்பாடுகள் கொள்கை ரீதியானவையா கட்சி நல உரித்துக்கள் சம்பந்தப்பட்டவையா என்று நாம் பார்க்க வேண்டும். கட்சி நலவுரித்துக்கள் எம்மைக் கட்டுப்படுத்தா. ஆனால் கொள்கை முரண்பாடுகள் எம்மை உள்ளீர்ப்பன. சில வேளைகளில் கொள்கைகள் ஒன்றாக இருக்க நடைமுறைச் செயற்பாடுகள் முரண்பாடுடையன என்று ஒரு கட்சி மற்றைய கட்சி பற்றி விமர்சிக்கக் கூடும். அவற்றைத் தீர்த்து வைக்க தமிழ் மக்கள் பேரவை அவர்களின் முரண்பாடுகளிடையே உள்நுழைய வேண்டும் என்பதில்லை. தனிப்பட்ட ரீதியில் பேரவையின் இணைத் தலைவர்களோ அங்கத்தவர்களோ அம் முரண்பாடுகளை நீக்க இரு சாராரினாலும் கோரப்பட்டார்கள் என்றால் அவற்றைத் தீர்க்க அவர்கள் முன்வரலாம். உதாரணத்திற்கு கௌரவ கஜேந்திரகுமார் அவர்களின் கட்சிக்கும் கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களின் கட்சிக்கும் இடையில் எழுந்துள்ள முரண்பாடுகளை நீக்க எமது இணைத்தலைவர் ஒருவர் முன்வரலாம். ஆனால் அது அந்த இணைத்தலைவரின் தனித்துவமான அவரின் ஏற்புடைத் தன்மையைப் பொறுத்து ஏற்கப்பட்ட கடமையாகவே இருக்கும்.

மூன்றாவதாக இன்று நாம் பரிசீலிக்கப்போவது அங்கத்துவக் கட்சிகளின் தேர்தல் செயற்பாடுகள் பற்றிய பேரவையின் கொள்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதாகும். அதனை நீங்களே தீர்மானிக்க வேண்டும். தமிழ் மக்கள் கூட்டணி தமிழ் மக்கள் பேரவையில் இருந்து வெளிவந்த ஒரு கட்சி. பேரவை உருவாக்கும் போது அன்று நடைமுறையில் இல்லாத கட்சி. மற்றைய கட்சிகள் பேரவையை உருவாக்க உதவி புரிந்த கட்சிகள். இவற்றுள் வேறுபாடு காட்ட வேண்டுமா என்பது உங்களைச் சார்ந்தது. இப்பொழுது கூட பேரவையில் அங்கம் வகிக்கும் பலரே கூட்டணியின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றார்கள். உதாரணத்திற்குப் பேராசிரியர் சிவநாதனைக் குறிப்பிடலாம்.

இவை யாவும் பற்றி நாம் இன்று கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

நாம் ஒற்றுமையுடனும் பரஸ்பர நம்பிக்கையுடனும் கட்சி பேதங்களைக் கடந்து இதுவரை காலமும் செயற்பட்டதன் விளைவாகவே தமிழ் மக்கள் பேரவையை எமது மக்கள் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் பார்த்து வந்துள்ளார்கள். எமது இந்த ஒற்றுமைதான் "எழுக தமிழ்" போன்ற பல காத்திரமான செயற்பாடுகளை நாம் கடந்த சில வருடங்களில் இயற்ற வழிவகுத்திருந்தது. இது தொடரவேண்டும். எமது ஒற்றுமையின் மூலம் நாம் செய்யவேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. நாம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் அரசியல் நடவடிக்கைகளிலும் இந்த ஒற்றுமை நிலவவேண்டும் என்று எமது மக்கள் சார்பாக நான் எதிர்பார்க்கின்றேன்.

கடந்த காலங்களில் எமக்கிடையே சில கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். இது சிலர் மனதை புண்படுத்தி இருக்கலாம். சிலருக்கு ஏமாற்றம் அளித்திருக்கலாம். சிலர் மத்தியில் பல சந்தேகங்களையும் அவநம்பிக்கைகளையும் ஏற்படுத்தியும் இருக்கலாம். நான் அவற்றைப் புரிந்து கொள்கின்றேன். அவற்றில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு மீண்டும் அதே தவறுகள் இடம்பெறாமல் நாம் எவ்வாறு எமது மக்களுக்கு சேவை செய்யப்போகிறோம், எவ்வாறு எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடையப்போகிறோம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு கடமையாற்ற வேண்டிய காலகட்டத்தில் நாம் இன்று நிற்கின்றோம். எமக்கிடையே பிரிவினைகளை ஏற்படுத்திக் கொண்டு மீண்டும் மீண்டும் நாம் முரண்பட்டுக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டு எம்மை நாமே அழிக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட நாம் இனிமேலும் இடமளிக்கமுடியாது. சில சக்திகள் எம்முள் முரண்பாடுகளை முன்னெடுக்க மும்முரமாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் மறத்தலாகாது. எமக்கு இடையிலான அரசியல் ரீதியான காழ்ப்புணர்வுகள் மற்றும் வன்முறையான முரண்பாடுகள் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்துக்கு எந்தளவுக்கு பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றன என்பதை வரலாற்றில் இருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இங்கு இருக்கும் எந்தவொரு கட்சிக்கும் பக்கச்சார்பாக செயற்பட முடியாது. தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு கட்சியும் தனித்துவம் மிக்கவை.

அந்த நிலைக்கு ஏற்ப அரசியலை எவ்வாறு எதிர்கொள்வது என்று நீங்கள் எடுக்கும் எந்த முடிவுக்கும் நான் குறுக்கே நிற்க மாட்டேன். அது உங்களைப் பொறுத்த விடயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களின் பிரச்சினையைக் கையாண்ட விதத்தில் எனக்கு எள்ளளவும் உடன்பாடு இருக்கவில்லை. அவர்கள் கொள்கை பிறழ்ந்தார்கள் என்று நான் நம்பியதால் அவர்களுடன் முரண்பட்டு வெளியேறினேன். அதற்காக இன்று வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் அமைப்பின் மீதோ அதன் தலைவர் சித்தார்த்தன் மீதோ எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த விதகோபதாபங்களும் இல்லை. அரசியலில் நண்பர் சித்தார்த்தனின் அணுகுமுறை வேறாக இருக்கலாம். ஆனால் அவர் எனது நண்பர். என் மதிப்புக்குரிய ஒருவரின் மகன். அவருடன் இணைந்து பல வேலைகளை தமிழ் மக்கள் பேரவையில் நாம் எல்லோரும் முன்னெடுத்திருக்கின்றோம். அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சி ரீதியாக கூறு போடும் வேலையை நான் செய்ய மாட்டேன்.

அதேவேளை, கொள்கை ரீதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் முரண்பட்டு வெளியேறிய கட்சிகள் இங்கு இருக்கின்றன. அவர்களுடன் கொள்கை அடிப்படையில் ஒற்றுமையாக இணைந்து அரசியலில் செயற்படுவதே எனது விருப்பம்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளும் செயற்பாடுகளும் தமிழ் மக்கள் கூட்டணியுடன் முரண்படுவதால் நாம் சேர்ந்து மக்கள் முன்னிலையில் எமது கருத்துக்களை எடுத்துச் சொல்லி எமது கொள்கைகளுக்கு மக்களின் ஆதரவைப் பெற நாம் முயல வேண்டும் என்று கருதுகின்றேன். இந்த விதத்தில் தேசியக் கட்சிகளுடன் தற்பொழுது ஒரே கருத்துடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரே எதிர்மாறான கருத்துடைய ஒரு துருவக் கட்சியாக நாம் சேர்ந்து பயணிக்க வேண்டும். மாற்றுத் தலைமைத்துவத்தை உருவாக்கக் காலம் கனிந்துள்ளது. தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளுடன் நாம் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

நான் எந்தக் கட்சிக்கும் பக்கச்சார்பாக நின்று அவர்களின் சின்னத்தில் தேர்தல்களில் போட்டியிட முடியாது. இது எமக்கிடையிலான ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும். பிரிவினைகளை மேலும் ஏற்படுத்தும். தமிழ் மக்கள் பேரவைக்குள் பிளவை ஏற்படுத்தும். அதனால் தான், எந்தக் கட்சிக்கும் சார்பாகச் செயற்படாமல் ஒரு புதிய பொதுச் சின்னத்தின் கீழ் தமிழ்த் தேசியத்தின்பால் பற்றுறுதி உள்ள எல்லோரையும் ஒன்றிணைக்கும் வகையில் தமிழ் மக்கள் கூட்டணியின் கீழ் போட்டியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே நிற்கும் EPDP தவிர்ந்த மற்றைய தமிழ்க் கட்சிகளை அழைக்கிறேன். மீண்டும் மீண்டும் எமக்குள்ளேயே குரோதங்களையும் விரோதங்களையும் வளர்த்துக்கொண்டு தொடர்ந்தும் எமக்குள் முரண்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமைகளுக்கு இடங்கொடாமல் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை அடிப்படையில் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு ஊடாகத் தேர்தல் அரசியலை பயன்படுத்திக்கொள்வதற்கு என்னுடன் கைகோர்க்குமாறு அழைக்கிறேன்.

அதேவேளை, ஒற்றுமை என்ற காரணத்துக்காக தவறுகளைக் கண்டும் காணாது இருந்துவிட முடியாது. எமது பயணத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தவறுகளுக்கு நாம் இடம்கொடுக்க முடியாது. நான் தவறு விட்டால் அதனைச் சுட்டிக் காட்டி தக்க நடவடிக்கை எடுக்கும் கடமை உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. இதுவரையில் நடந்த எமது தவறுகளை மறப்போம், மன்னிப்போம். இதன் பின் நாம் ஒன்றாகக் கைகோர்த்து பயணிப்போம். ஆனால் இனிமேலும் தவறுகள் இடம்பெறாமல் இலட்சியத்தை மனதில் நிறுத்தி செயற்படுவோம். தவறுகளைத் தக்க முறையில் கையாள்வோம். ஒரு புதிய பொதுச் சின்னத்தின் கீழ் எம்மை ஒன்றிணைக்கும் பணியை தமிழ் மக்கள் பேரவையின் பிரமுகர்கள் மேற்கொள்வார்கள் என்று நம்புகின்றேன். என்னைப் பொறுத்த வரையில் தண்ணீர் கலந்த மிளகாய்த்தூளை யார் மேலுந் தெளிக்காது உங்கள் முடிவை மனமுவந்து ஏற்றுக்கொள்வேன். (மு)

# ஷா, அலி மிரட்டல்; நியூசிலாந்து சறுக்கல்

## பாகிஸ்தானுக்கு வெற்றி பிரகாசம்



வேகத்தில் ஹசன் அலியும் சுழலில் யசிர் ஷாவும் மிரட்ட அபுதாபி டெஸ்டில் நியூசிலாந்து அணி 2ஆவது இன்னிங்சில் 249 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் அபுதாபியில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் நியூசிலாந்து 153, பாகிஸ்தான் 227 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாம் நாள் முடிவில், 2ஆவது இன்னிங்சில் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட்டை இழந்து 56 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**வோட்லிங் ஆறுதல்**

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த நியூசிலாந்து அணிக்கு அணித் தலைவர் வில்லியம்சன் (37), ஜீத் ரவால் (46), ரோஸ் டெய்லர் (19) நிலைக்கவில்லை. ஹென்ரி நிக்கோல்ஸ் (55), வோட்லிங் (59) அரைச்சதம் கடந்தனர்.

இரண்டாவது இன்னிங்சில் நியூசிலாந்து அணி 249 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஹசன் அலி, யாசிர் ஷா தலா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**சுலப இலக்கு**

பின், 176 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் 2வது இன்னிங்சை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, நேற்றைய 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 37 ஓட்டங்களை எடுத்திருந்தது. இமாம் உல் ஹக் (25), ஹபீஸ் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தானின் வெற்றிக்கு 10 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் இன்னும் 139 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்பதால், அவ்வணிக்கு வெற்றி பெற வாய்ப்பு பிரகாசமாகவே உள்ளது.

5 விக்கெட்டுக்களை கொய்து நியூசிலாந்தை அச்சுறுத்திய பாகிஸ்தானின் ஹசன் அலி

## கோகோவிச் வெற்றி




ஏ.டி.பி., பைனல்ஸ் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதிக்கு செர்பியாவின் ஜோகோவிச் முன்னேறினார். அரையிறுதியில் 6-2, 6-2 என தென்னாபிரிக்காவின் கெவின் அண்டர்சனை தோற்கடித்தார்.

லண்டனில், ஏ.டி.பி., பைனல்ஸ் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர் 1' செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 6ஆவது இடத்தில் உள்ள தென்னாபிரிக்காவின் கெவின் அண்டர்சன் மோதினர்.

முதல்செட்டை 6-2 எனக் கைப்பற்றிய ஜோகோவிச், 2ஆவது செட்டையும் 6-2 என மிகச் சுலபமாக வென்றார். முடிவில் ஜோகோவிச் 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 7ஆவது முறையாக இறுதிக்கு நுழைந்தார்.

# டிரைவர் தோனி

## லக்ஷ்மன் வெளியிட்ட இரகசியம்



இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் தோனி மைதானத்திலிருந்து அணி வீரர்களுக்கான 'பஸ்சில்' டிரைவராக செயற்பட்ட சம்பவத்தை லக்ஷ்மன் வெளிப்படுத்தி உள்ளார்.

இந்திய அணி முன்னாள் வீரர் லக்ஷ்மன் (வயது-44), சச்சின், டிராவிட் போல நட்சத்திரமாக ஜொலித்தவர். இவர் '281 அன்ட் பியான்ட்' என்ற பெயரில் சுயசரிதை எழுதி உள்ளார். இதில், தோனி குறித்து சுவாரஸ்யமான தகவலை பகிர்ந்துள்ளார்.

**இதன் விபரம்**

தோனி குறித்து மறக்க முடியாத நினைவுகள் அதிகம் உள்ளன. இவர் எந்த நேரத்திலும் கோபப்பட மாட்டார். கடந்த 2008இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நாக்பூர் டெஸ்டில் விளையாடினோம். இது நான் களமிறங்கிய 100ஆவது டெஸ்ட். அப்போது, மைதானத்திலிருந்து அணிக்கான 'பஸ்சில்' புறப்பட்டோம். திடீரென, டிரைவர் இருக்கையில் அமர்ந்து தோனி 'பஸ்சை' செலுத்த தொடங்கினார். இதை என்னால் நம்பவே முடியவில்லை. பின், வீரர்கள் தங்கிய ஹோட்டல் வரை இவர்தான் டிரைவராக இருந்தார். கும்ளேவுக்குப்பின், டெஸ்ட் தலைவராக இறங்கியபோதும், எவ்வித பதட்டத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஒரு அணித் தலைவர் 'பஸ்சை' இயக்குவாரா என நான் வியப்பில் உறைந்து போனேன். இவரைப்போன்ற வீரரை பார்த்ததே இல்லை.

**நெருக்கடி அதிகமாகும்**

கடந்த 2011ல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0-4 என முழுமையாக இழந்தோம். அடுத்தடுத்த வீழ்ச்சியால் அனைத்து வீரர்களும் சோகத்தில் இருந்தோம். தோனி முகத்தில் வருத்தமே இல்லை. தோல்வி அடைந்ததால் எந்த ஒரு வீரரையும் வசைபாடவில்லை.

அப்போது, 'தோல்வியை பற்றி சிந்தித்தால் மனதளவில்நெருக்கடி அதிமாகும். அடுத்தடுத்த போட்டியில் இதை பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

எப்போது பார்த்தாலும், தோனி 'கூலாக' இருப்பார். இவ்வாறு அதில் லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## திருமதி சாந்தலிங்கம் புஸ்பவதியம்மா



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தலிங்கம் புஸ்பவதியம்மா அவர்கள் 17.11.2018 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - சின்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற சாந்தலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரி (ஆசிரியை - யா/ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம்), செல்வகுமார் (உதவி விவசாயப் பணிப்பாளர், விதை அத்தாட்சிப்படுத்தல், பரந்தன்), செந்தில்குமார் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சற்குணநாதன், செந்தில்வாணி, துலாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமியும் மாதுளன், கர்னிகா, ஆதீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (6496)

சுன்னாகம் கிழக்கு — தகவல்:- குடும்பத்தினர்


## பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

வலம்புரி நாளிதழின் பிரதேச செய்தியாளர்களாகக் கடமையாற்ற விரும்புகின்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


விண்ணப்பதாரிகள் தமது

முழுப்பெயர், பிறந்த திகதி, நிரந்தர முகவரி, தபால் முகவரி, கல்வித் தகைமை, தொழில் (இருப்பின்) தே.அ.அ.இலக்கம், மின்னஞ்சல் முகவரி (இருப்பின்), தொலைபேசி இலக்கம் என்பன உள்ளடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்

பொதுமுகாமையாளர்
வலம்புரி

# நாடாளுமன்ற மோதல் தொடர்பில் ஆறு பேரிடம் வாக்குமூலம் பதிவு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அண்மையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் இது வரை ஆறு பேரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசாரணைகளுக்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதலின் போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் மருத்துவ அறிக்கைகளையும் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதுவரையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐவரின் மருத்துவ அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த அணியினர், சபாநாயகரின் அக்ராசனத்தை முற்றுகையிட்டு கோஷங்களை எழுப்பியதுடன், சபை அமர்விற்கும் இடமளிக்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ சபாநாயகரின் அக்ராசனத்தில் அமர்ந்திருந்தார்.

அத்துடன், சபாநாயகரின் பாதுகாப்புக்காக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்த பொலிஸார் மீதும் அவர்கள், சபையில் இருந்த தளபாடங்கள் மற்றும் புத்தகங்களால் வீசித் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

இந்த தாக்குதல்களில், 16 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தனர். இதுதவிர, மகிந்த தரப்பினர் மிளகாய்த்தூள் கலந்த நீர் பிரயோகங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த தாக்குதல்கள் காரணமாக பொலிஸார், மக்கள் விடுதலை முன்னணியின் விஜித ஹேரத் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மலிக் சமரவிக்கிரம மற்றும் காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீட்டுக் கதவுகளைப் பூட்டி திறப்பை எடுத்துக்கொண்டு நித்திரைக்குச் செல்லுங்கள்

## திருட்டைத் தடுக்க பொலிஸார் அறிவுரை

(கரணவாய்)

இரவில் வீட்டுக் கதவுகளைப் பூட்டி திறப்பினை எடுத்து வைத்துவிட்டு நித்திரைக்குச் செல்லுமாறு நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயதிலக அறிவுரை வழங்கியுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கான கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 15 நாளுக்கு ஒரு முறை பொலிஸார் சென்று அங்கு மக்களை சந்தித்து அவர்களின் குறைகளைகண்டறியவேண்டும்.

மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் களவுகளை குறைக்க முடியும்.

பல வீடுகளில் இரவு நித்திரைக்கு செல்லும் போது வீட்டின் திறப்பினை பூட்டி அப்படியே விட்டுவிட்டு நித்திரைக்கு செல்கிறார்கள் அதுவும் திருடர்களுக்கு சாதகமானதாகும். எனவே வீடுகளை பூட்டி திறப்பினை எடுத்துக் கொண்டு நித்திரைக்குச் செல்ல வேண்டும்.

சிவில் பாதுகாப்பு குழுக்களில் உள்ளவர்கள் நல்ல விடயத்திற்கு மட்டுமே பொலிஸ் நிலையம் வர வேண்டும்.

அதைவிடுத்து களவு, குடி போதையில் வாகனம் செலுத்தியமை, குடும்ப சண்டைகள் இவற்றிற்கு எல்லாம் பொலிஸ் நிலையம் வர வேண்டாம்.

பொலிஸார் இரவு வேளைகளில் ரோந்து செல்லும் போது ஒவ்வொரு ஊர்களையும் சேர்ந்த மூன்று பேர் பொலிஸாருடன் பயணித்தால் ஊரிற்குள் அறிமுகம் இல்லாதவர்களின் நடமாட்டம் குறித்து அறிவதுடன் பொலிஸார் தவறிழைப்பதையும் கண்டு கொள்ள முடியும் என பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயதிலக மேலும் தெரிவித்தார். (இ-60)

# மூன்று நாட்களில் 8 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஒரு நாளைக்கு ஏற்படும் செலவு 2 கோடியே 53 இலட்சம் என அங்குள்ள தகவல் அறியும் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் 95 சபை அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இதற்காக வேண்டி 245 கோடிக்கும் அதிகமான நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வளவு பாரிய மக்கள் பணம் செலவு செய்து கூட்டப்படும் பாராளுமன்ற கூட்டங்களில் அறிவார்ந்த விவாதங்கள் நடத் தப்படாதது கவலைக்குரிய விடயம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

செலவு செய்யப்படும் நிதியை வைத்துப் பார்க்கும் போது கடந்த மூன்று பாராளுமன்ற அமர்வுகளுக்கும் சுமார் எட்டுக் கோடி ரூபா பொது மக்களின் பணத்தை செலவு செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# பிரதமர் யார் என்பது பிரச்சினையில்லை நாட்டை வீழ்ச்சியை நோக்கி யாரும் நகர்த்த வேண்டாம்

## விஜித் விஜேமுனி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டு மக்கள் முன் இன்றுள்ள பிரச்சினை பிரதமர் யார் என்பது அல்லவெனவும், நாட்டைச் சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதாகும் எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜேமுனி சொய்ஷா தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நான் பாராளுமன்றத்துக்கு 89 ஆம் ஆண்டு பிரவேசித்தேன். அன்று முதல் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வுகளில் அண்மையில் நடந்தது போன்ற முறைகேடான சம்பவம் ஒன்று இடம்பெற்றதில்லை. இது கவலைக்குரிய ஒன்றாகும்.

பிரதமர் யார் என்பதல்ல எம்முன்னுள்ள பிரச்சினை. நாட்டை சரியான பாதையில் வழிநடத்த முயற்சிப்பதாகும். நான் பிரதமர் எனக் கூறிக் கொள்பவரும், பிரதமராக எதிர்பார்த்துள்ளவரும் இணைந்து ஒத்துழைத்து நாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்வதாகும்.

அடுத்த தேர்தலில் அதிகாரமும் பலமும் யாரிடம் இருக்கின்றது என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள். தயவு செய்து யாரும் நாட்டை வீழ்ச்சியை நோக்கி நகர்த்த வேண்டாம் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார். (இ-7)

# பாராளுமன்றத்தில் இன்றும் வாக்கெடுப்பு

## ஐ.தே.க.விடாப்பிடி



(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று திங்கட்கிழமை கூடும் போது முடியுமானால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன் வைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

சபாநாயகரின் நடவடிக்கைகளில் திருப்தியடையாதிருந்தால் அல்லது அவரின் மீது அதிருப்தி கொண்டிருந்தால் முடியுமானால் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவாருங்கள் எனவும் நளின் பண்டார சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பதிலாக் வாக்கெடுப்புக்கு விடப்படும் தீர்மானம் ஒன்றை இன்று திங்கட்கிழமை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

**இடபம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| செவ் | இராசி பலன்<br>கிரகநிலை | | ராகு |
| கேது | சந்திராஷ்டமம்<br>திருவாதிரை<br>காலை10.13மணிக்கு | | |
| சனி | குரு<br>சூரி | சுக்.<br>புத | |

**19.11.2018**

கார்த்திகை 03, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 06.08மணிக்கு

ஏகாதசி பிற்பகல் 12.50 மணிவரை

உத்தரட்டாதி பிற்பகல் 5.01 மணிவரை

சுபநேரம் 12.09-1.39 மணிவரை

இராகுகாலம் 7.39-09.09 மணிவரை.

உத்தாண ஏகாதசி விரதம்

முதலாவது கார்த்திகை சோமவாரம்

வளவன்

**கடகம்:** உடல் நலன் சீராகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மகரம்:** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வழி பாடு சிறப்பினைத் தரும்.

**சிம்மம்:** சஞ்சலங்கள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள்

**தனுசு:** திட்டமிட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வழியில் புகழ் கூடும், ரோக பயமுண்டு

**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், போட்டிகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம்காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





நெல்லியடி நவிண்டில் ஸ்ரீசுந்தர ஐயப்ப ஆலய கொடியேற்ற நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. தொடர்ந்து 10 நாட்கள் விழா நடைபெறும். விரதமிருக்கும் ஐயப்ப பக்தர்களுக்கு குருசாமி மாலை அணிவித்து விரதத்தினை ஆரம்பித்து வைத்தார். 48நாட்கள் விரதம் இருந்து பல பக்தர்கள் சபரிமலை யாத்திரை செல்வர். (படங்கள்: விஜயவாசன்)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கிழக்கு மாமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தின் கௌரவிப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாமுனை பொது மண்டபத்தில் தலைவர் இ.ஜெயமுகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-9)

## 23 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்



(யாழ்ப்பாணம்)

மாகாண சபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியில் இருந்து முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபனால் 23 பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கைதடியில் அமைந்துள்ள சமூக சேவைகள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான துவிச்சக் கரவண்டிகளைக் கையளித்தார். (இ-89)

யாழ்.செய்திகள்

## வரணியில் உப பொலிஸ் நிலையம் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற பிரதேசமாகவும் வரணிப்பகுதி காணப்படுகின்றது.

அத்துடன் பிரதேச வைத்தியாலை, நூல் நிலையம், வரணி மத்திய கல்லூரி, பொதுச் சந்தை, கடைத் தொகுதிகள், பிரபல்யமான ஆலயங்கள், சமுர்த்தி அலுவலகம், கலாசார மண்டபம் போன்றனவும் இப் பிரதேசத்தில் அமைந்துள்ளன.

இவ்வாறு சிறப்புப் பெற்று விளங்கும் இப்பகுதியில் அண்மைக்காலமாக சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக குழுமோதல், அடிதடி, வாள்வெட்டு, கஞ்சாப் பாவனை, கால்நடைகள் கடத்தப்படுதல், திருட்டு, பாடசாலை மற்றும் தனியார் வகுப்புகளுக்குச் சென்றுவரும் மாணவிகளுடன் தவறாக நடக்க முற்படுத்தல், மதுபோதையில்வீதியில்நின்று தகாத வார்த்தைகளால் பெண்கள், ஆண்கள் என அனைவரையும் பேசுதல், தட்டிக்கேட்க முற்படும் போது அவர்களைத் தாக்குதல், கள்ளச் சாராயம் விற்றல், கடைகள் மீது தாக்குதல் நடத்தல் போன்ற செயற்பாடுகளில் சமூக விரோதிகள் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக சிவில் பாதுகாப்புக் குழு கூட்டங்களின் போது பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்ற போது பொலிஸார் தாமதமாகவே சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு வருவதாகவும் இதனால் குற்றவாளிகள் தப்பித்துச் சென்றுவிடுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே உப பொலிஸ் நிலையம் ஒன்றினை வரணியின் மையப்பகுதியில் சந்தையடிப் பகுதியில் அமைப்பதன் மூலம் இவ்வாறான சமூக விரோதச் செயல்களை முழுமையாக கட்டுப்படுத்த முடிவதுடன் இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களையும் கைது செய்ய முடியும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே உயர் பொலிஸ் அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி வரணி சந்தையடிப்பகுதியில் உப பொலிஸ் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (இ-103)

## கோப்பாய்ப் பகுதியில் பாரிய சந்தை அமைக்க பிரதேச சபை நடவடிக்கை

### தவிசாளர் நிரோஸ் தகவல்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கோப்பாய் பகுதியில் பாரிய சந்தை ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கையை வலி.கிழக்கு பிரதேச சபை ஆரம்பித்துள்ளதாக பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வலி. கிழக்கு பிரதேசமானது அதிகளவான விவசாய நிலப்பரப்புக்களையும் விவசாய உற்பத்தியை அதிகளவில் மேற்கொண்டு முன்னணியில் உள்ள பிரதேசமாகும். இங்கு 18 ஆயிரம் விவசாயிகளும் 7 ஆயிரத்து 500 விவசாய தொழிலாளர்களும் உள்ளனர்.

ஆனால் ஏனைய பிரதேச சபைகளையும் பார்க்க குறைந்த அளவிலான வருமானத்தை எமது சபை பெற்று வருகிறது.

எனவே எமது மக்களின் வருமான மார்க்கம் ஏனைய பிரதேசங்களுக்கு செல்லாமல் எமது பகுதி வருமானத்தினை அதிகரிப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளோம். அந்த வகையில் மிக முக்கியமாக வலி.கிழக்கில் முக்கிய பகுதி ஒன்றில் பாரிய சந்தை தொகுதி ஒன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆகவே பாரிய சந்தை தொகுதியை அமைப்பதற்கான இடமாக கோப்பாயில் கைதடி மானிப்பாய் வீதியில் உள்ளகிருஸ்ணன் கோவிலை அண்மித்த பகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள பலரது காணிகள் பரிசீலிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை அரச கொள்வனவுக்கு ஏற்ற போதிய அளவு ஆவணங்களை கொண்டிருக்கவில்லை. தொடர்ச்சியான முறையில் காணிகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதியில் காணி உள்ளவர்கள் எமது பகுதியில் வருமானத்தை கருத்தில் கொண்டு நிலத்தை வழங்குவதற்கு முன்வர வேண்டும். அன்பளிப்பாகவோ விற்பனைக்காகவோ வழங்க முடியும். விலை மதிப்பீட்டு அடிப்படையில் பெற்றுக்கொள்ள தயாராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)








"மரபு பேணுவோம்" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா கடந்த 16 ஆம் திகதி கல்லூரி பிரதான கலையரங்கில் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. காலை, மாலை என இரண்டு அமர்வாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் அறிஞர் கௌரவிப்பில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை உப பீடாதிபதி கலாநிதி திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் பிரதமவிருந்தினரால் கௌரவிக்கப்பட்டார். அதனை தொடர்ந்து இடம்பெற்ற அமர்வில், வீரசங்கிலி மலரை கல்லூரி அதிபர் வெளியிட்டு வைக்க பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் சார்பாக கலந்துகொண்ட கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் கனகசபை செல்வக்குமார் பெற்றுக்கொண்டார். அத்துடன் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. காலை அமர்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி சுகந்தி ஸ்ரீமுரளிதரன், மாலை அமர்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர் கிருஸ்ணபிள்ளை விசாகரூபன், யாழ்.பல்கலைக்கழ சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# ஒன்றரை மாதத்தில் 271 பேருக்கு யாழில் டெங்கு நோய்த்தாக்கம்

## விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒன்றரை மாத காலப்பகுதிக்குள் 271 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் பரவுவதற்குரிய சாதகமான நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் கடந்த ஒன்றரை மாத காலப் பகுதிக்குள் 271 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை விட சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 60 பேர் வரையில் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். இனிவரும் நாட்களில் தொடர்ச்சியாக மழை பெய்யும் என எதிர்வுகூறப்படுவதால் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் டெங்கு நோய் தடுப்பு செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதை சுகாதார பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து முன்னெடுத்து வருகிறார்கள். இச் செயற்றிட்டத்தில் பொதுமக்களும் பங்களிப்பதுடன் ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதாரப் பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## ஆறு இலட்சம் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் மீட்பு-சந்தேக நபர் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெலிமடையை நோக்கி பண்டாரவளை ஊடாக பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் சுமார் ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த தனியார் பேருந்தின் நடத்துநர் சந்தேகத்தின் பேரில் பண்டாரவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்போவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கொழும்பிலிருந்து வெலிமடையை நோக்கி சென்ற தனியார் பேருந்தில் ஹெரோயின் போதைப்பொருள் இரகசியமான முறையில் கொண்டுவரப்படுவதாக பண்டாரவளை பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனையடுத்து குறித்த பேருந்தை பண்டாரவளையில் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது பேருந்தில் பந்து ஒன்றில் சிறிது சிறிதாக பக்கட், இடப்பட்டு அடைக்கப்பட்ட நிலையில் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும், சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அரசியல் நெருக்கடி நிலை காரணமாக நாடாளுமன்றச் செயலாளர் அதிருப்தி

(கொழும்பு)

தற்போது அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அதிருப்தியில் காணப்படுவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

இதன் காரணமாக பொதுச் செயலாளர் இராஜினாமா செய்யத் தயாராகவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

## தங்க நகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.10.2017 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 08.12.2018 (சனிக்கிழமை), 09.12.2018 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) மானிப்பாய் | | |
| தெல்லிப்பளை | மல்லாகம் காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | 08.12.2018 |
| ஊர்காவற்றுறை | -- | | (சனிக்கிழமை) |
| நெல்லியடி | -- | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டபத்தரிப்பு | 07.12.2018 | 09.12.2018 |
| சுன்னாகம் | கோப்பாய் அளவெட்டி | | (ஞாயிற்றுக்கிழமை) |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | யாழ். ஸ்ரான்லி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி கல்வியங்காடு | | வீதிக் கிளை |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | -- | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:- 021 222 2601/ 021 222 8602
தொலை நகல்:- 021 222 2602
ஈ-மெயில்:- jafrho@peoplesbank.lk

(சி-4449)



உ
சற்குருபாதம் துணை

## பொதுக்கூட்ட அழைப்பு

இடம்:- கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் மண்டபம்.
காலம்:- 20.11.2018 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி

நிகழ்ச்சி நிரல்

- தலைமையுரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- அறங்காவலர்/நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு
- ஆச்சிரம நிதி வளங்கள் பற்றிய ஆய்வு
- பண்ணிசை மண்டப பூர்த்தி பற்றிய ஆய்வு
- நன்றியுரை

சகல அங்கத்தவர்களும் மெய்யன்பர்களும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பேசிவம்
குருநாதன் பணியில்

(C-4433)

மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்
கிளிநொச்சி

உப தலைவர்:- ஆ.சிவநாதன்
செயலாளர்:- ச.ஸ்ரீமுருகன்

Regd No:- HA/04/KL 02 of 25.11.1980
Tel.No:- 021 324 3443, 077 459 4283, 077 431 9281



தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## பானை முறையிலான பொறித்தொகுதி திருத்தம் செய்வதற்கான மதிப்பீட்டறிக்கை பெற்றுக்கொள்ளல்

எமது வரணி வடிசாலையில் பொருத்தப்பட்டிருக்கும் பானை முறையிலான பொறித்தொகுதியை 2019 ஆம் ஆண்டில் தொழிற்படுத்தக்கூடியவாறு திருத்தம் செய்து கொள்வதற்கான மதிப்பீட்டு அறிக்கையினை (துறைசார்ந்த தொழில்நுட்பவியலாளர் மூலம்) 30.11.2018 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நாட்களில் பொறித் தொகுதியை பார்வையிட்டு அறிக்கையினை தலைவர் - தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(சி-4448)

தலைவர், திரு.க.துரைசிங்கம்



## யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை சிற்றுண்டிச்சாலைக்கான விலைமனுக் கோரல்-2019

31.12.2015 திகதியிடப்பட்டதும் 85/2015 இலக்கமும் கொண்ட சுற்று நிருபத்திற்கமைய 01.01.2019- 31.12.2019 வரையான காலப்பகுதிக்கு எமது கல்லூரியில் சிற்றுண்டிச் சாலையை நடத்திச் செல்வதற்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(மாணவர்கள்-1000, ஆசிரியர்கள்- 66) விண்ணப்பிக்க விரும்புவோர் 05.12.2018 (புதன்கிழமை) இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அதிபர் யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப் பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-4450)

அதிபர்


உ
சிவமயம்
ஓம் நமசிவாய

## காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் பணிகள் களைகட்டிப் பரவட்டும்



காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் 18 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் அண்மையில் (28.10.2018) நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

ஒழுக்கப் பிறழ்வான சூழ்நிலையிலிருந்து இன்றைய இளம் சமுதாயத்தின் சிந்தனைகளை மீட்டெடுத்து சிவநெறி யில், அறநெறியில் வாழ ஊக்குவிக்குமாப்போல் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப் பெற்றிருந்தது பாராட்டுக்குரியது.

பேச்சு, குழு இசை, மிருதங்க இசை, வயலின் இசை, வீணை இசை, அரங்க ஆற்றுகை, நாட்டியாஞ்சலி, பட்டிமண்டபம் என்று அமர்க்களப்படுத்தியிருந்தாலும், இன்று அவமதிப்புக்குள்ளாகியிருக்கும், திருமுறைப் பண்ணிசை நிகழ்வு மனதிற்கு ஆறு தலளிப்பதாக இருந்தது. அதுவும் பிள்ளைகள் ஆளுடைப் பிள்ளையின் திருநெறிய தமிழான யாழ்மூரிப் பண்ணிலமைந்த "மாதர் மடப்பிடியும்" என்ற தேவாரத்தை ஓதியது மிக மிகச் சிறப்பாக அமைந்தது.

இப் போற்றுதலுக்குரிய பணிகளை கலாமன்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று சிறப்புற வழி நடத்தியவரும், நடராஜா சோதிநாதன் அவர்களும் அனுசரணை வழங்கி வரும் "கலைமாடக்கோன்" சண்முகம் சிவஞானம் அவர்களும் இந்த மண்ணின் மைந்தர்களால் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

இவர்கள் பணி சிறக்கவும், இவர்களது ஏனைய உதவியாளர்களது அன்புகள் சிறக்கவும் "உய்ய என் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்று" ஒளிவிடும் ஈழத்துச் சிதம்பரத்தான் அருள்வாராக.

க.கு.க.சிவபாலன்,
போசகர், காரைநகர் மாணிக்கவாசகர்
மடாலயம்.

(சி-4443)

# இராணுவத்தினால் கொல்லப்பட்ட விவசாயக்கல்லூரி மாணவர்களின் நினைவேந்தல் வவுனியாவில் அனுஷ்டிப்பு





(பனிக்கன்குளம்)

இராணுவத்தினால் கொல்லப்பட்ட விவசாயக் கல்லூரி மாணவர்களின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையில் நினைவேந்தல் நிகழ்வு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா தாண்டிக்குளம் விவசாயக்கல்லூரிக்கு அருகில் இராணுவத்தினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலின்போது இராணுவத்தினர் திருப்பித்தாக்கியதில் விவசாய கல்லூரி வளவில் கற்றல் நடவடிக்கை மேற்கொண்டிருந்த ச.கிந்துஜன், சி.கோபிநாத், இரா.அச்சுதன், ஆர்.மொகமட், தி.சிந்துஜன் ஆகிய ஐந்து மாணவர்கள் உயிரிழந்தனர்.

இவர்களின் நினைவு தினம்வருடாவருடம்விவசாய கல்லூரியில் இடம்பெற்று வருவதுடன் குறித்த மாணவர்களின் நினைவாக மரநடுகை, இரத்ததானம், தாக சாந்தி போன்ற சேவை களை விவசாயக்கல்லூரி மாணவர்கள் குறித்த நினைவு தினத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

இந் நிகழ்வில் தாண்டிக்குளம் விவசாயக்கல்லூரி அதிபர். விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உயிரிழந்த மாணவர்களின் உறவினர்கள், பழைய மாணவர்கள் , பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு உயிரிழந்த மாணவர்களின் படத்திற்கு சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். (2-281)

# 300 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்



(கிளிநொச்சி)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கனடா புலம்பெயர் உறவுகளின் உறங்கா விழிகள் அமைப்பின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட மாற்றுதிறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு 4ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ் கஜேந்திரன், மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய கஜேந்திரகுமார், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வாறு சிறிய சிறிய உதவிகளை செய்து அவர்களை முன்னேற்ற முடியாது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவிகள் கிடைக்கக்கூடிய வாறு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என தெரிவித்தார். (2)





# பூநகரி பிரதேச பண்பாட்டு பெருவிழா



(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையும் பூநகரி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டு பெருவிழா பூநகரி கிராஞ்சி கற்பக விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் கடந்த 15 ஆம் திகதி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு எட்டாவது ஆண்டாக வெளியிடப்படும் "பூந்துணர்" நறவும் 8ஐ வெளியிட்டுவைத்தார்.

எட்டாவது ஆண்டாக கலைச்சேவை ஆற்றிய மூவர் தெரிவு செய்யப்பட்டு கலைநகரி விருது, இளங் கலைஞர் விருதுவழங்கப்பட்டுபொன்னாடை, பதக்கம் அணிவிக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.இந்நிகழ்வில் நாடகம், நடனம், இசைநாடகம், காவடி ஆட்டம் என்பன அரங்கேறியது.

இந்நிகழ்வில் கிளி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன் உட்பட கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்கள், வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் அஞ்சலி தேவி சாந்தசீலன் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# சனசமூக நிலையம் திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா சிதம்பரபுரம் பழனி நகரில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் நிதியொதுகீட்டில் கட்டப்பட்ட சனசமூக நிலைய கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் பழனி நகருக்கான உள்ளக வீதி முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் நிதியொதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இவ் வேலைகள் தமிழ் தெற்கு பிரதேச சபையின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இக் கட்டடத்தில் நூலகம் இயங்கவுள்ளதுடன் மாலை நேர வகுப்புக்கள் இடம்பெறவுள்ளக.

நிகழ்வில் தமிழ்விருட்சம் அமைப்பால் மாணவர்களிற்கு கல்விசார் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

# கம்பரலிய வேலைத்திட்டத்தின் கீழ் கரைச்சியில் 15 வீதிகள் புனரமைப்பு

(பரந்தன்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் நாடாளவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய வேலைத்திட்டமான கம்பரலிய திட்டத்தின் கீழ் 15 உள்ளக வீதிகள் புனரமைக்கப்படுகின்றன என கரைச்சி பிரதேச செயலக உதவி திட்டப்பணிப்பாளர் அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 15 உள்ளக வீதிகளுக்கும் தலா இரண்டு மில்லியன் வீதம் முப்பது மில்லியன்கள் ஒதுக்கப்பட்டு குறித்த வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி நகரில் மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வீதி, இரத்தினபுரம் கண்ணன் கோவில் வீதி, நீதிமன்ற அருகாமை வீதி, பாரதிபுரம், செபஸ்ரியார் வீதி உள்ளிட்ட 15 வீதிகள் தார் வீதியாக புனரமைக்கப்படுகின்றன. இதற்காகன வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (2-312)

# யாழ்ப்பாணத்திற்கு கடத்துவதற்கு தயாராக இருந்த முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று

## செக்காலை காட்டில் சம்பவம்



(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி செக்காலை அடர்ந்த காட்டுப் பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு கடத்துவதற்கு தயாரான நிலையில் இரு மகேந்திர பிக்கப் வாகனங்களில் ஏற்றப்பட்டிருந்த சுமார் பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை கைப்பற்றியுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இடம்பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

பூநகரி பொலிஸ் பிரிவின் புலன் ஆய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பூநகரி பொலிஸ் நிலைய அதிபர் கபிலபண்டார தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் பூநகரி செக்காலை அடர்ந்த காட்டுப்பகுதியில் யாழ்ப்பாணப் பகுதிக்கு கடத்துவற்கு தயாராய் இரு மகேந்திரா பிக்கப் வாகனத்தில் ஏற்றப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை கைப்பற்றியதுடன் இம் மரக்கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் மூவரையும் கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை நடைபெறுகின்றது.

இவ்விருவாகனங்களும் முதிரை மரக்குற்றிகளும் இன்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் சந்தேக நபர் மூவரும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் இன்றைய தினம் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாகவும் பொலிஸ் நிலைய வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. ஆறாவது மரக்கடத்தல் என தெரிவிக்கப்படுகின்றது. (2-84)

# அளவு கருவிகளுக்கு முத்திரையிடல் செயற்பாடுகள் இன்று பூநகரியில்

(பூநகரி)

நிறுவைகள் அளவைகள், நிறுத்தல் கருவிகள், அளவீடு அலகுகள், நியமங்கள் சேவைப் பிரிவினரால் அளவு கருவிகளுக்கு முத்திரையிடப்படும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் முழங்காவில் ஜெயபுரம் பகுதியில் இம்முத்திரையிடல் பணி இடம்பெற்று இன்று பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இடம்பெறவுள்ளதாக பூநகரி பகுதி வர்த்தகர்களுக்கு அறிவித்தல் விடப்பட்டுள்ளது. (2-84)

# தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(மன்னார்)

ஒரு வருடத்தில் சுமார் 15 ஆயிரம் பேர் சபரிமலைக்கு புனித யாத்திரை செய்வதோடு, ஏனைய தென் இந்திய புனிதத் தலங்களுக்கு, இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புனித யாத்திரை மேற்கொள்வதால் அவர்களின் பயணத்தை இலகுபடுத்துவதற்கும், 100 கிலோவுக்கும் அதிகமான பொதிகளை தம்மோடு எடுத்துச் செல்வதற்கும் வசதியாக தலை மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையே கப்பல் போக்குவரத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் ஸ்ரீ ஹரி ஹரசுதன் ஐயப்ப யாத்திரைக் குழுவினர் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர். முதலில் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக கப்பல் போக்குவரத்தை ஆரம்பித்தாலும் அத்துடன் சாதாரண பொதுமக்களும் வர்த்தகர்களும் இந்தியாவுக்கான தமது பயணத்தை இலகுவாகவும் குறைந்த செலவுடனும் மேற்கொள்வதற்கு வசதியாக இந்தக் கப்பல் சேவை செயற்படுத்தப்படும். அவ்வாறு கப்பல் சேவை நிரந்தரமாக முன்னெடுக்கப்படும்போது, இந்தியாவில் அகதிகளாக தங்கியிருக்கும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை மக்கள் தமது உடைமைகளுடன், பொதிகள் தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு முகம்கொடுக்காமல் இலகுவாக தாயகம் திரும்புவதற்குமான வாய்ப்பையும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இந்து மத அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார். (2)

# அக்கராயன் குளத்தின் வான்பகுதியில் உடைவுகள் ஏற்பட்டு நீர்க்கசிவு

(கண்டாவளை)



கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் புனரமைப்புப் பணிகள் பல மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் அதன் வான்பகுதியில் உடைவுகள் ஏற்பட்டு நீர்க்கசிவுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி அக்கராயன்குளம் கடந்த 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டபோதும் அதன் வான்பகுதி குறிப்பிட்ட காலத்தின் பின்னர் சேதமடைந்துள்ளது.

இதனையடுத்து கடந்த 2014 ஆம் ஆண்டிலும் இதன் வான்பகுதி மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னரும் நீர்க்கசிவு ஏற்பட்டு இவ்வாண்டில் இக்குளத்தின் வான்பகுதியின் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த வேலைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படாது பல மில்லியன் ரூபா நிதிசெலவிடப்பட்ட போதும் எந்தப்பயனுமற்று குளத்தின் வான்பகுதியில் நீர்க்கசிவு ஏற்பட்டுநீர்வெளியேறி வருகின்றது.

தற்போது. 22 அடியாக நீர்மட்டம் இருக்கின்ற போது இவ்வாறான கசிவு ஏற்பட்டிருக்கின்றது. குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து வான்பாயும் போது இதன்கசிவு மேலும் அதிகரிக்கலாம் எனப் பல்வேறு தரப்புக்களும் தெரிவித்துள்ளன. (2-315)

# பச்சிலைப்பள்ளி பிரதேச அபிவிருத்திகளை நேரில் பார்வையிட்டார் சிறிதரன் எம்.பி.





பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஒதுக்கீட்டில் குறித்த அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அத்துடன் குறித்த வேலைத்திட்டங்களை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேரடியாக சென்று நேற்று முன்தினம் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் ஒருகட்டமாக அன்றைய தினம் இத்தாவில் பகுதியின் நல்லம்மா தோட்ட பிரதான வீதியின் புனரமைப்பு பணிகளை நேரடியாக சென்று பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டுள்ளார்.

இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான ரமேஷ். வீரவாகுதேவர்.கோகுல்ராஜ் ஆகியோரும் கிராம மட்ட அமைப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.(2-315)

# 12 ஆயிரத்து 452 அபாயகரமான வெடிபொருட்கள் ஸார்ப் அகற்றம்

வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அம்பகாமம்மற்றும்தச்சடம்பன் ஆகிய பகுகளிலும் ,கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகமாலையிலும் ஆறு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து நானூற்று முப்பத்தொரு சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து பன்னிரண்டாயிரத்து நானூற்று ஐம்பத்திரண்டு அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

தற்போது நான்கு அணிகள் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு தளபாடங்கள்



கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்திலுள்ள இரண்டு மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு அண்மையில்ஒரு தொகுதி தளபாடங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேசத்திலுள்ள ஞானிமடம், நெற்புலவு ஆகிய கிராமங்களின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கே இவ்வாறு தளபாடங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாதர் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகளிடம் உபகரணங்களை கையளித்துள்ளார்.

பூநகரி பிரதேச பொது அமைப்புகளுக்கு ஆரம்பகட்ட செயற்பாடுகளுக்காக டக்ளஸ் தேவானந்தா 10 ஆயிரம் ரூபா பணம் வழங்கி வைத்துள்ளார் என நெற்புலவு மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவி லூத்தம்மா தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

தமது பிரதேசத்தின் தேவைப்பாடுகளான வீட்டுத்திட்டம், வீதி அபிவிருத்தி, தெரு மின்விளக்கு பொருத்துதல், மாதர்சங்க கட்டடம் புனரமைப்பு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு என்பவற்றை பெற்றுக் கொடுக்க வேண்டும். எனவும் தவநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளித்த தவநாதன் தமக்கு கிடைத்த அதிகாரத்தை வைத்து அதிக மக்கள் பணிகளை தாம் செய்துள்ளோம். அதிகாரம் கிடைக்கும் பட்சத்தில் மக்களுக்கான சேவையை மேலும் விரிவு படுத்த முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஞானிமடம் வட்டார இணைப்பாளரான க.ஜெயக்குமார், பள்ளிக்குடா வட்டார இணைப்பாளர் ந.எமேஷ்குமார் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# சத்ய சாயி பாபாவின் அவதார தினத்தை முன்னிட்டு இலவச மருத்துவமுகாம்





(பனிக்கன்குளம்)

ஸ்ரீசத்ய சாயி பாபாவின் 93. ஆவது அவதார தினத்தை முன்னிட்டு வவுனியா பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் ஆகிய கிராம மக்கள் பயன் பெறும் வகையில் வவுனியா நவ்வி ஸ்ரீசாயி வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தியுள்ளது.

இவ் வைத்தியமுகாமில் பொது மருத்துவ முகாம், நிபுணத்துவ மருத்துவ சேவை, கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், காது, மூக்கு, தொண்டை ஆகிய நோய்களுக்கான சிகிச்சை பற்சிகிச்சை, சித்த வைத்திய முகாம் , தொற்றா நோய்களை இனம்காணும் குருதிப் பரிசோதனை.

முன்பள்ளி மாணவர்கள் 22 பேருக்கு கற்றல் உபகரணங்கள், ஆகிய சேவைகள் பொது மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

கண் வைத்திய முகாமின் மூலம் 225 பேரும் பற்சிகிச்சை மூலம் 54 பேரும் பொது வைத்திய முகாமின் மூலம் 270 பேரும் சித்த வைத்திய முகாம் மூலம் 115 பேரும் மொத்தமாக 664 பேரும் இலவச வைத்திய முகாம் மூலம் பயன் பெற்று இருந்தனர்.

பிராந்திய சுகாதார சேவைகள். உத்தியோகத்தர்கள், வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள்,தாதியர்கள், ஊழியர்கள், சென் யூரி தாதியர் பயிற்சி கல்லூரி மற்றும் விசன்கெயார் நிறுவன உத்தியோகத்தர்களும் என பல நிறுவனங்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# சஜித்தை பிரதமராக்கி ஐ.தே.கவை அழித்துவிட்டு மீண்டும் ஜனாதிபதியாக மைத்திரி மாஸ்டர் பிளான்

## அப்பத்தை கொடுத்து ஆப்பு வைச்சதுக்கு சும்மா இருப்பாரா மகிந்த-அமீர்அலி



(கொழும்பு)

ஜனாதிபதி பதவியை குடும்ப சொத்தாக நினைத்து சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை சமூகத்தை கறிவேப்பிலையாக பாவிக்கும்நிகழ்வை எங்களால் அனுமதிக்க முடியாது என முன்னாள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலில் ஏற்பட்ட திடீர் மாற்றம் மற்றும் அதனை தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு மீராவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு நான்கரை வருடங்களுக்கு பிறகுதான் உள்ளது. இதுபற்றி விளக்கம் தெரியாத ஜனாதிபதியாக இருக்க வேண்டும்.

அரசியலமைப்பு சட்டத்தை பத்தாம் ஆண்டு மாணவனிடம் கொடுத்தாலே அவன் அதனை தெளிவாக வாசித்து சொல்லுவான். அதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தில் கூட, நான்கரை வருடங்களுக்கு பிறகு தான் கலைக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக கலைக்க வேண்டுமாக இருந்தால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை காட்டிய பின் கலைக்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை உள்ள நிலையில் சட்டவிரோதமான பிரதமர் மகிந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தோம்.

ஜனாதிபதிக்கும் சபாநாயகர் மற்றும் சிறுபான்மை கட்சி தலைவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் வாக்கெடுப்பை நடத்துங்கள் அதில் ஜனநாயகமாக நடந்து கொள்ளுங்கள் என்று என்னுடைய உறுப்பினர்களிடம் சொல்லுகின்றேன்.

அவ்வாறு இல்லையெனில் சபாநாயகரிடம் உள்ள அதிகாரத்தின் மூலம் வாய்மூலமான வாக்கெடுப்பை நடத்தலாம் என்றார். வாய்மூலமான வாக்கெடுப்பை நடத்த சபாநாயகர் முற்பட்ட போது சபாநாயகரை தாக்கி மிளகாய்தூள் தண்ணீர் ஊற்றி, பெறுமதியான புத்தகங்களை எல்லாம் வீசினார்கள்.

இவர்கள் வேறு யாரும் இல்லை. கடந்த ஆட்சிகாலத்தில் செய்த தவறுகளால் இப்போது நீதிமன்றத்தில் வழக்குகளுடன் தொடர்புடையவர்கள். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வந்தால் தான் தாம் நிம்மதியாக வாழ முடியும் என்று நம்புகின்றவர்கள்.

உயர்அந்தஸ்துள்ள அமைச்சர்கள் எவரும் சண்டித்தனம் காட்ட மாட்டார்கள். அது நாடாளுமன்ற முறை. ஆனால் இங்கு அவை மீறி காட்டப்பட்டுள்ளது.

இப்போது வாய்மூலமான வாக்கெடுப்பு நடத்தி பிரதமருக்கு எதிரான பிரேரணை வெற்றி பெற்ற பின் ஜனாதிபதியிடம் சென்ற போது அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நாடாளுமன்றத்தில் சபாநாயகர் எடுத்த முடிவை எந்த நீதிமன்றமும் எதிர்க்க முடியாது.

பிரதமர் மகிந்தவை கூப்பிட்டு பெரும்பான்மையை நிரூபித்து காட்டுங்கள் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி. மீண்டும் ஜனாதிபதியாக தாம் வரவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால ஆசைப்படுகின்றார் என்பது தான் இதன் அர்த்தம்.

ஆனால் மகிந்தவை பற்றி இவருக்கு தெரியாது. அப்பத்தை கொடுத்து ஆப்பு வச்சதுக்கு சும்மா இருப்பாரா மகிந்த. ஜனாதிபதி தேர்தல் வந்தால் மகிந்த கட்சியில் உறுப்பினர்கள் அதிகம் ஆனால் ஜனாதிபதிக்கு யாரும் இல்லை.

அதுமட்டுமல்ல பிரதமர் பதவி கிடைத்தவுடன் மகிந்த தனது உறுப்பினர்களுக்கு தாமரை மொட்டில் உறுப்பினர் பதவியை பெற்றுக் கொடுத்து ஜனாதிபதியின் கட்சியில் இருந்து பிரிந்து சென்றுள்ளார். ஐக்கிய தேசிய கட்சியை உடைக்கும்வகையில்சஜித்பிரேமதாஸவை கொண்டு வாருங்கள் என்று கூறுகின்றனர்.

அவ்வாறு சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியோடு சென்று பிரதமர்பதவியை பெற்று ஆட்சி நடத்தும் பட்சத்தில் சஜித் பிரேமதாஸவையும், ஐக்கிய தேசிய கட்சியையும் அழித்துவிட்டு மீண்டும் மகிந்த ராஜபக்ஷவோடு பணியை தொடரலாம் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார் என அமீர் அலி தெரிவித்துள்ளார். (இ-7)

## கொடிகாமத்தில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் 20 குடும்பங்கள்



(சாவகச்சேரி)

தென்மராட்சி கொடிகாமம் மத்தியில் ஜே/327 கிராம உத்தியோகத்தர் பிரிவில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கூட அற்ற நிலையில் சுமார் 20 குடும்பங்கள் நிர்க்கதி நிலையில் உள்ளனர்.



இக்குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஆனையிறவு உப்பளத்தில் தொழில் புரிந்து வந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு ஆனையிறவு யுத்தம் ஆரம்பித்ததன் காரணமாக இடம்பெயர்ந்து கொடிகாமம் புகையிரத நிலையத்தில் கைவிடப்பட்டிருந்த ரயில் பெட்டிகளில் வாழ்ந்துள்ளனர்.

இந்நிலையில் கொடிகாமம் மத்தியில் பற்றைக்காடுகளாக இருந்த குறிப்பிட்ட காணிகளில் 20 குடும்பங்களையும் அப்போது விடுதலைப் புலிகள் குடியேற்றினர்.

குறித்த காணி திருநாவுக்கரசு மடாலய அறக்கட்டளை சபைக்கு சொந்தமானது என்றும் அந்தக் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகள் ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அங்கு குடியிருக்கின்ற ஒரு சில குடும்பங்களுக்கு திருநாவுக்கரசு மடாலய அறக்கட்டளை சபையினால் 99 வருட குத்தகைக்கும் காணி வழங்கப்பட்டுள்ளது.

இங்குள்ள குடும்பங்களுக்கு தனியான மலசலகூடமோ அல்லது பொது மலசலகூடமோ இதுவரை அமைத்துக்கொடுக்கப்படவில்லை. குடிநீர் வசதிகள் நிர ந்தர வீடுகள் என்பன இல்லை.

குறித்த காணிகளை குடியிருக்கின்ற மக்களுக்கே சட்ட ரீதியாக வழங்கப்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றி அதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன்,முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்,வட்டார உறுப்பினர் சிவனேசன் நகர சபை உபதவிசாளர் அ.பாலமயூரன்,நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்று மக்களின் நிலைமைகளை அவதானித்தனர்.

இதன்போது குறித்த குடும்பங்களுக்கான காணி உறுதி மாற்றலுக்கான இலவச சட்ட ஆலோசனை, குடிநீர் வசதி, தற்காலிக வீதி என்பனவற்றை உடனடியாக ஏற்பாடு செய்துகொடுத்துள்ளனர்.

மேலும் காணி உறுதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்ட பின்னர் வீட்டுத்திட்டம் பெற்றுக்கொள்வதற் கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளனர். (இ-89)

## இஸ்ரேல் சிறையிலுள்ள இலங்கையர்களை தூதரக அதிகாரிகள் நேரில் சந்திப்பர்

(கொழும்பு)

அகதி அந்தஸ்து கோரிய நிலையில் இஸ்ரேலிய கிவோன் சிறைக்கூடத்தில் உள்ள இலங்கையர்களை, இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதுவராலயத்தை சேர்ந்த அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிடுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிவிவகாரத்துறையை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

சுற்றுலா நுழைவு அனுமதியுடன் இஸ்ரேல் சென்றுள்ள 13 இலங்கையர்கள் இஸ்ரேலிய அதிகாரிகளால் சிறையிலடைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய "ஜெருசலம் போஸ்ட்" ஒரு வாரத்திற்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது. கைது செய்யப்பட்ட இலங்கையர்களில் இரண்டு பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இது தவிர, நீரிழிவினால் பாதிப்படைந்துள்ள ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சிறையடைக்கப்பட்டதன் பின்னர் சட்டத்தரணிகள் எவரையும் சந்திப்பதற்கான வாய்ப்பு இஸ்ரேலிய நிர்வாகிகளால் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும், இந்த விடயத்தில் இஸ்ரேலிய தலைநகரில் உள்ள இலங்கை தூதுவராலயத்தின் வேண்டுகோளுக்கு அமைய தற்போது சந்தேக நபர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளன.

தூதுவராலய அதிகாரிகள் சிறையிலடைக்கப்பட்டுள்ளவர்களை சந்தித்ததன் பின்னர், அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் உடல் நிலை போன்ற விபரங்களை பெற முடியும் என இலங்கை தூதுவர் பீ. செல்வராஜா தெரிவித்துள்ளார். (இ-7)

## இரு வேறு விபத்துக்களில் இருவர் பலி!

(கொழும்பு)

வாரியபொல - புத்தளம் வீதியின் பாதெனிய முச்சந்தியில் இடம்பெற்ற விபத்தில நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகியதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் வாரியபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இதேவேளை பாணந் துறை - ஹொரண வீதியில் ஆட்டோ ஒன்று பாதையில் நடந்து சென்ற நபர் ஒருவர் மீது மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குறித்த நபர் உயிரிழந்துள்ளார். (இ-7)

## அதிபர் தாக்கியதில் மாணவி படுகாயம்

(கொழும்பு)

பாடசாலை அதிபரால் தாக்கப்பட்ட மாணவி ஒருவர் பலத்த காயங்களுடன் அப்புத்தளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலில் ஏற்பட்ட காயத்திற்கு கையில் நான்கு தையல்கள் போடப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் தலைமை வைத்தியர் தெரிவித்தார். அப்புத்தளை பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றிலே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்றுவந்த எஸ். பிரமிளா என்ற மாணவியே கையில் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வகுப்பறையை கூட்டி சுத்தம்செய்யவில்லை என்ற காரணத்தினால் அதிபருக்கு ஆத்திரம் ஏற்பட்டு இத்தாக்குதலை மேற்கொண்டதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து அப்புத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைபடாடு பதியப்பட்டுள்ளதையடுத்து அப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அரசியல் நெருக்கடிக்கு தேர்தல் தீர்வு என்பது சட்டப்படி தவறு

## ரட்ணஜீவன்ஹூல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)


நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வாக பொதுத்தேர்தலொன்றுக்குச்செல்ல வேண்டும் என்று முன்மொழியப்படும் கருத்து சட்டத்தின் அடிப்படையில் மிகத் தவறானதாகும்என தேர்தல்கள்ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் மூன்று உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலிடம் கொழும்பு ஊடகம் நடத்திய நேர்காணலில்,

நெருக்கடி நிலைமைக்குத் தீர்வாக திடீரென தேர்தல் ஒன்றுக்குச் செல்வது சட்டத்தின் அடிப்படையில் மிகத் தவறானதாகும்.

அச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அவை சட்ட மீறல்களாகவே அமையும்.

ஜனநாயகம் என்பது மக்கள் ஆணையைப் பெறுவது மட்டுமல்ல. பெற்றஆணையை நடைமுறைப்படுத்துவதும் ஜனநாயகம் தான். ஆகக்



குறைந்தது நான்கரை வருடங்களுக்கானமக்கள்ஆணை ஒரு பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஆணைபெற்றுள்ள ஒருவர் தலைமையிலான அரசாங்கத்திற்கு இடைக்காலப் பகுதியில் மக்கள் ஆதரவு அதிகரிக்கலாம் அல்லது குறையலாம். அவற்றைப் பொருட்படுத்தி மாற்றங்களைச் செய்ய முடியாது. ஒரு தலைவர் மக்கள் விரும்பாத முடிவுகளை எடுக்கலாம்.

அல்லது முடிவுகளை எடுப்பதன் ஊடாக மக்களின் செல்வாக்கை இழக்கலாம். அது பிறிதொரு விடயமாகும் எனவும்தேர்தல்கள்ஆணைக்குழுவின் உறுப்பினர் பதிலளித்துள்ளார். (இ-7)

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு கரடியனாறு கொடுவாமடு பகுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தி.யகேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடுவாமடு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் குறித்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இதன்போது மாவீரர் கடற்புலி கப்டன் ரூபனின் தாயார் முதல்சுடர் ஏற்றிவைத்ததையடுத்து மாவீரர்களுக்கு 2 நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டு இணைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மட்டு மாவட்ட கட்சி செயலாளர் க. ஜெகநீதன், பொருளாளர் க.கனகசபை, வவுணதீவு அமைப்பாளர் வினோதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# விபத்தில் லொறி சாரதி பலி 25 பயணிகள் படுகாயம்

(கொழும்பு)

வரக்காப்பொல பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் லொறி சாரதி உயிரிழந்த நிலையில் மேலும் 25 பயணிகள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரக்காப்பொல பகுதியில் நேற்று முன்தினம் இரவு லொறி ஒன்றும் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர்மோதியதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த விபத்தில் லொறியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிழந்ததோடு குறித்த பேருந்தில் பயணித்த 25 பயணிகள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வரக்காப்பொல பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சோள உற்பத்தி பெரிதும் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல மாவட்டங்களிலும் பூச்சிகளினால் சோள உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 1575 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சோள உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை, மொனராகலை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் சோள உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் சோள உற்பத்தியைத் தவிர, மரக்கறி, பழும், நெற்செய்கையும் பூச்சிகளினால் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 3 குழுக்களாக பிரிந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி...?

## ஆனந்த அளுத்கமகே தகவல்



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி தற்போது மூன்று குழுக்களாக பிரிந்துள்ளதாக பிரதி அமைச்சர் ஆனந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பிரதமர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒருபோதும் முன்னோக்கிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை சஜித் பிரேமதாஸ பொறுப்பேற்றுக் கொண்டால்அவருடன்இணைந்து பயணிக்கவே தாம் தீர்மானித்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

எனினும் தற்போதுள்ள சூழ்நிலையில் அவரால் கட்சியின் பொறுப்பை ஏற்று முன்னோக்கி செல்லமுடியாது எனவும் பிரதி அமைச்சர் ஆனந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (இ-7)

# எங்களுக்கு மிளகாய் பொடி அடித்த மகிந்தவுக்கு பிறந்தநாள் வாழ்த்து

## அஜித் பெரேரா சீண்டல்



(கொழும்பு)

இலங்கையில் அரசியல் ரீதியாக பெரும் பரபரப்பான சூழ்நிலை காணப்படும் நிலையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வித்தியாசமான வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று தனது பிறந்த நாளை கொண்டாடினார்.

மகிந்த ராஜபக்ஷ இம்முறை தனது 73 ஆவது பிறந்த நாளை நேற்றுக் கொண்டாடினார்.

பிறந்த நாளை முன்னிட்டு வருடாந்தம் இடம்பெறும் புண்ணிய தான நிகழ்வுகள் இம்முறையும் அபயராம விகாரையில் இடம்பெற்றது.


அத்துடன் மகிந்தவின் பிறந்த நாளை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா மகிந்தவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்தில் "எங்களுக்கு மிளகாய் பொடி அடித்த மகிந்த ராஜபக்ஷ அவர்களே! உங்களுக்கு 73 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# உலக வரலாற்றில் பார்த்திராத சபாநாயகர் இலங்கையில்

## லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்றில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக அதற்கு பொறுப்பு கூற வேண்டிய சபாநாயகர் உடனடியாக அந்த பதவியில் இருந்து விலக வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

அந்த முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை வெளியேற்ற அவைக்குள் பொலிஸாரை



அழைத்து வர முடியும்.

அந்த தருணத்தில் சபாநாயகர் அக்ராசனத்தில் இருந்து வெளியேற வேண்டும். ஆனால் சபாநாயகர் பொலிஸாருடன் பிரவேசித்து வாக்கெடுப்பை நடத்துகின்றார்.


இது போன்ற சபாநாயகர் ஒருவரை தான் உலக வரலாற்றிலே பார்த்ததில்லை. நாடாளுமன்றில்சிக்கலை தோற்றுவித்துள்ள சபாநாயகர் உடன் பதவி விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (இ-7)

# பாரதம்

## பஞ்சாப்பில் குண்டு வெடிப்பு மூன்று பேர் உயிரிழப்பு

(சென்னை)

பஞ்சாப் மாநிலம், நீரன் கரிபவன் பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்துள்ளடன் 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தினால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை தொடர்ச்சியாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் உயிரிழப்புகள் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

அந்தவகையில் சம்பவம் தொடர்பில் பஞ்சாப் பொலிஸார், சி.சி.டி.வி கமரா வில் பதிவான காட்சிகளை அடிப்படையாக வைத்து விசாரணைகளை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7)

## சட்ட விரோதமாக நுழைந்த அமெரிக்கர் வெளியேற்றம்

### வடகொரியா முடிவு

(சிடேல்)

சீனாவில் இருந்து வட கொரியாவினுள் சட்ட விரோதமாக நுழைந்த அமெரிக்கரை வெளியேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது என வடகொரிய அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சீனாவில் இருந்து கடந்த மாதம் 16ஆம் திகதி வட கொரியாவினுள் சட்ட விரோதமாக நுழைந்த ஒரு அமெரிக்கர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்திய விசாரணையில் அவரது பெயர் லாரன்ஸ் புரூஸ் பைரன் என தெரிய வந்தது. அவர், "அமெரிக்காவின் மத்திய உளவுப் படை சி.ஐ.ஏ. உத்தரவின் பேரில்தான் நான் வடகொரியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைந்தேன்" என கூறினார்.

அவரை நாட்டில் இருந்து வெளியேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது என வடகொரிய அரசின் செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ. தெரிவித்தது.

பொதுவாக வடகொரியா இப்படி சட்டவிரோதமாக தங்கள் நாட்டினுள் நுழைகிற யாரையும் எளிதில் விடுவித்து விடாது. இருப்பினும் அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்துகிற நிலையில் இருப்பதால்தான் லாரன்ஸ் புரூஸ் பைரனை விடுவிக்க முடிவு செய்துள்ளது என தகவல்கள் கூறுகின்றன.

இதே லாரன்ஸ் புரூஸ் பைரன் பெயரில் ஒருவர் கடந்த ஆண்டு தென்கொரியாவில் சட்டவிரோதமாக நுழைந்து கைது செய்யப்பட்டார்.

அவர் வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்குத்தான் தான் தனிப்பட்ட பயணமாக வந்துள்ளதாக தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து அவர் அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார். (7)

## கலிபோர்னியா காட்டுத்தீ

## பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறிய ஜனாதிபதி ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் காட்டுத்தீக்கு பலியானோர் எண்ணிக்கை 76 ஆக உயர்ந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்களை ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று சந்தித்து ஆறுதல் கூறினார்.



அமெரிக்காவின் சில மாநிலங்களில் கோடைக் காலங்களில் திடீரென்று காடுகள் தீப்பிடித்து எரிந்து குடியிருப்பு பகுதிகளுக்கும் தீ பரவுவதால் பல்லாயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கலிபோர்னியா மாநிலத்தின் சியேர்ரா நெவேடா மலையடிவாரத்தில் அண்மையில் ஏற்பட்ட காட்டுத்தீ அம்மாநிலத்தின் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் உள்ள வனப்பகுதிகளையும் அருகாமையில்உள்ள குடியிருப்புகளையும் சூழ்ந்துள்ளது.

கட்டுக்கடங்காமல் பரவும் காட்டுத்தீயால் அப்பகுதிகளில் கடும் புகை மூட்டமாக உள்ளது. இதனால் தீயை அணைப்பது மீட்புப் படையினருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்து வருகிறது.

கடந்த 8ஆம் திகதி எரியத்தொடங்கிய இந்த காட்டுத்தீயானது, சுமார் 27 ஆயிரம் மக்கள் வாழும் பாரடைஸ் நகரை முற்றிலுமாக பொசுக்கி அழித்து விட்டது. அருகாமையில் உள்ள பகுதிகளையும் சேர்த்து 10 ஆயிரம் வீடுகள் நாசமடைந்தன. 52 ஆயிரம் மக்கள் தங்களது வீடுகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில், கலிபோர்னியா வரலாற்றில் மிகப்பெரிய காட்டுத்தீயாக கருதப்படும் நிலையில் இதில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை இன்று 76 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், தீ சூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்துவந்த ஆயிரத்து 200 இற்கும் அதிகமானவர்கள் காணாமல் போனதாக அவர் களின் உறவினர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் பாதுகாப்பான பகுதிகளில் அடைக்கலம் அடைந்துள்ளனரா? அல்லது, காட்டுத்தீயில் சிக்கிக் கருகி விட்டார்களா? என்னும் பீதி அமெரிக்க மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வோஷிங்டன் நகரில் இருந்து தனி விமானம் மூலம் நேற்று கலிபோர்னியா மாநிலத்துக்கு வந்தார். சாக்ரமான்டோ நகரின் வடக்கேயுள்ள பியேல் விமானப்படை தளத்தில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் பறந்து சென்ற ட்ரம்ப், இந்த காட்டுத்தீயால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தார்.

அதிகம் பாதிக்கப்பட்ட பாரடைஸ் நகரில் எரிந்த வீடுகளை அவர் சென்று பார்வையிட்டார். உடைமைகளை இழந்த மக்களுக்கு ஆறுதல் கூறிய ட்ரம்ப், தீயணைப்பு பணியில் ஈடுபட்டு வரும் வீரர்கள், பொலிஸார், அரசியல் தலைவர்கள், காணாமல் போனவர்களை தேடும் குழுவில் இடம்பெற்றிருப்பவர்கள் ஆகியோரின் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார். (7)

## ஆப்கானில் இரா

## 70 பயங்கரவா

(காபூல்)



ஆப்கானிஸ்தான் நாட்டின் தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்த பகுதிகளில் நேற்றைய தினம் இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 70 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் சுமார் 45 சதவீதம் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திவரும் தலிபான் பயங்கரவாதிகள் ஏராளமான பொது மக்களை கொன்று குவித்து வருகின்றனர். அவர்களை

## திடீரென தீப்ப

## 42பேர் உடல்

### 28 பேர் படுகாய



(ஹராரே)

சிம்பாவே நாட்டின் மிட்லான்ட்ஸ் மாகாணத்தில் நிகழ்ந்த பேருந்து விபத்தில்சிக்கிய 42 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் சிம்பாவே நாட்டின் மிட்லான்ட்ஸ் மாகாணத்திற்குட்பட்ட ஸ்விஷாவானே பகுதியில் இருந்து தென்னாபிரிக்காவில் உள்ள முசினா என்ற பகுதியை நோக்கி

## அமெரிக்க கூட்டுப்ப

## 43பேர் உயிரிழப்பு!

(பெய்ரூட்)

சிரியா நாட்டில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் நடத்திய வான் வழி தாக்குதலில் 43 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் அரசுக்கு எதிராக உள்ளூர் கிளர்ச்சியாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். ஐ.எஸ். குழுவினரும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர். இவர்களை கட்டுக்குள் கொண்டுவர இராணுவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படை மற்றும் ரஷ்ய ஆதரவு பெற்ற அரசு படைகள் ஆகியவையும் போரில் இறங்கி உள்ளன. சிரியாவில் இது வரை குழந்தைகள், பெண்கள் உட்பட இலட்சக்கணக்கான பொதுமக்கள் குண்டுகளுக்கு இரையாகி உள்ளனர்.





# வெளிநாடு

## ராணுவம் தாக்குதல் ாதிகள் உயிரிழப்பு!



வேட்டையாடும் நோக்கத்தில் இராணுவமும், விமானப் படையும் தாக்குதல் நடத்தி வருகிறது.


இந்நிலையில், நேற்று காலை லக்மன், நன்கர் ஹர், பக்டிக்கா, காஸ்னி, மைடான் வர்டக், கந்த ஹார், உருஸ்கான், ஃபரா, கோர், டக்ஹர், ஃபர்யாப், ஹேம் லன்ட், நிம்ரோஸ் ஆகிய மாகாணங்களில் இராணுவ வீரர்கள் நடத்திய தேடுதல் வேட்டையில் 70 பயங்கர வாதிகள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

சுமார் 20 பயங்கரவா. திகள் காயங்களுடன் பிடி பட்டனர் என அந்நாட்டு பாது காப்புத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் இருந்த தலிபான்களின் ஆயுத கிடங்குகள் மற்றும் பதுங்கு குழிகள் இந்த தாக்குதல் அழிக் கப்பட்டன என அந்நாட்டின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. (7)

## ட்ரம்புடன் வாக்குவாதம்

## சி.என்.என். செய்தியாளருக்கு வெள்ளைமாளிகையில் நுழைய அனுமதி



(வோஷிங்டன்)

ட்ரம்புடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சி.என்.என். செய்தியாளருக்கு மீண்டும் வெள்ளை மாளிகைக்குள் செல்ல அனுமதி அளிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் இடைத் தேர்தல் நடந்து முடிந்தது.

இதில் பிரதிநிதிகளுக்கான இடைத் தேர்தலில் ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சி சரிவைச் சந்தித்தது.

இதன்பிறகு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ட்ரம்ப் கலந்து கொண்டார். அப்போது, சிஎன்என் செய்தியாளர் ஜிம் அகோஸ்டா, மத்திய அமெரிக்காவில் இருந்து தெற்கு அமெரிக்க எல்லைக்கு இடம்பெயரும் அகதிகள் குறித்துக் கேள்வி எழுப்பினார்.

அதைத் தொடர்ந்து மற்றொரு கேள்வியைக் கேட்ட அகோஸ்டாவிடம், போதும் அமருங்கள் என ட்ரம்ப் கூறினார். இந்த விவகாரத்தால், ட்ரம்ப், பத்திரிகையாளர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

செய்தியாளர் சந்திப்பு முடிவுற்ற பின்னர், செய்தியாளர் ஜிம் அகோஸ்ட்டா வெள்ளை மாளிகையில் நுழைவதற்கான அனுமதி சீட்டு இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் அனுமதி செய்யப்பட்டது தொடர்பான வழக்கு வோஷிங்டன் பெடரல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. அப்போது, சி.என்.என். செய்தியாளரின் நுழைவு சீட்டை உடனடியாக திரும்பி அளிக்குமாறு வெள்ளை மாளிகைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதை எதிர்த்து வோஷிங்டன் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் ஜிம் அகோஸ்டாவுக்கு மீண்டும் அனுமதிச் சீட்டு வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் வெள்ளை மாளிகை நிர்வாகம் பத்திரிகையாளர் உரிமைகளை மீறி உள்ளதாக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த தீர்ப்புக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். எதிர்காலத்தில் இதற்கு முழுத் தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம். எங்களுக்கு ஆதரவு கொடுத்த அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் நன்றியை கூறிக் கொள்கிறோம்" என சி.என்.என் தொலைக்காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது. (7)

## பற்றிய பஸ்; ல் கருகிப்பலி

னர்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இந்த விபத்தில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதே மாகாணத்தில் உள்ள ருசாப்பே என்னுமிடத்தில்



சுமார் 70 பேர் ஒரு பேருந்தில் சென்று கொண்டிருந்தனர்.

புலாவயோ- பெய்ட்பிரிட்ஜ் சாலை வழியாக சென்ற போது அந்த பேருந்து திடீரென்று தீப்பிடித்து எரிய தொடங்கியது.

ஓடும் பேருந்தில் ஏற்பட்ட இந்த விபத்தில் சிக்கிய 42 பேர் உயிரிழந்தனர். 28 பேர் படுகாயமடைந்த

கடந்த வாரம் இரு பேருந்துகள் மோதிகொண்ட விபத்தில் 50 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## சவுதி இளவரசரின் உத்தரவுப்படியே கஷோக்கி கொலை செய்யப்பட்டார்

### அமெரிக்க உளவுப்படை ஆய்வில் உறுதி

(வோஷிங்டன்)

துருக்கி நாட்டு தூதரகத்தில் மயக்க மருந்து கொடுத்து வெட்டிக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலைக்கு சவுதி இளவரசர் மீது அமெரிக்க உளவுப்படை குற்றம் சாட்டியுள்ளது.



சவுதி அரேபியாவின் ஆட்சியாளர்களை கடுமையாக விமர்சித்து வந்த ஜமால் கஷோக்கி என்ற ஊடகவியலாளர் அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் இருந்தவாறு சவுதி அரசுக்கு எதிராக கட்டுரைகளையும், செய்திகளையும் வெளியிட்டு வந்தார்.

இந்நிலையில், அண்மையில் தாய்நாட்டுக்கு சென்று திருமணம் செய்துகொள்ள தீர்மானித்த ஜமால் கஷோக்கி, தேவையான சில ஆவணங்களை பெறுவதற்காக துருக்கி நாட்டின் தலைநகரான இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபியா நாட்டு தூதரகத்துக்கு கடந்த மாதம் இரண்டாம் திகதி சென்றார். அதன் பின்னர் அவர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

ஜமால் கஷோக்கியை தூதரகத்துக்கு வரவழைத்து சவுதி அரேபியாவை சேர்ந்த சிலர் அவரை தீர்த்துக்கட்டி விட்டு, சடலத்தை மறைத்து விட்டதாக குற்றம்சாட்டப்பட்டது.

இதற்கான ஆதாரமாக சவுதி தூதரகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட சில கண்காணிப்பு கமரா பதிவுகளை துருக்கி நாட்டு பொலிஸார் வெளியிட்டனர். இதை சவுதி அரசு திட்டவட்டமாக மறுத்து வந்தது.

இதன் அடிப்படையில் புலனாய்வு செய்துவந்த அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. அந்த விசாரணையை நேற்று நிறைவு செய்தது.

சவுதி பட்டத்து இளவரசர் முஹம்மது பின் சல்மான் உத்தரவின்பேரில் அங்கிருந்து சவுதி அரேபியா அரசுக்கு சொந்தமான தனி விமானத்தில் துருக்கி தலைநகர் இஸ்தான்புல் நகருக்கு வந்த 15 பேர், இங்குள்ள சவுதி நாட்டு தூதரகத்துக்கு ஜமால் கஷோக்கியை வரவழைத்தனர்.

தூதரகத்தினுள் அவரை மயக்கத்துக்குள்ளாக்கி துண்டுத்துண்டுகளாக வெட்டிக் கொன்று, உடலின் துண்டங்களை ஒரு தூதரக அதிகாரி வீட்டின் கிணற்றில் போட்டு மறைத்து விட்டனர் என இந்த விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

பட்டத்து இளவரசர் என்பதால் நாட்டின் அனைத்து விவகாரங்களிலும் முக்கிய முடிவெடுக்கும் முஹம்மது பின் சல்மானின் உத்தரவு இல்லாமலும், கவனத்துக்கு வராமலும் இதுபோன்ற எந்த காரியமும் நடக்க முடியாது என சி.ஐ.ஏ. உயரதிகாரி ஒருவரும் குறிப்பிட்டுள்ளார். (7)

## ப்படைத்தாக்குதல் !

ப்பின் குடும்பத்தினர் மீது அமெரிக்க கூட்டுப் படையினர் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் ஐ.எஸ். உறுப்பினர்களின் 17 குழந்தைகள் உட்பட 36 பேர பலியாகினர. மேலும், பலியான 7 பேர் பொதுமக்களா, அல்லது ஐ.எஸ். அமைப்பினரா? என அடையாளம் தெரியவில்லை.

இதுகுறித்து அமெரிக்க கூட்டுப் படையினர் கூறுகையில், பொதுமக்கள் பலியை தடுப்பதில் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறோம் என தெரிவித்துள்ளனர். (7)



இந்நிலையில், ஈராக் எல்லை அருகே டெயிர எஸ்ஸார் மாகாணத்தில் அபு ஹசன் கிராமத்தில் வசித்து வந்த ஐ.எஸ். அமை

# நாடாளுமன்றக் கலைப்புக்கு துணை நின்ற மல்கம் ரஞ்சித், சரத் என் சில்வா, தேசப்பிரிய



(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சதித் திட்டத்துக்கு, கர்தினால் மல்கம் ரஞ்சித், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஆகியோர் துணையாக இருந்தனர் என்று லங்காதீப சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் அறிவிப்பு வரையப்பட்டு, அதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்ட போது, ஜனாதிபதி செயலகத்தில், கத்தோலிக்கத் திருச்சபையின் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் இருந்துள்ளார்.

இந்தச் சதித் திட்டத்துக்கு முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா துணையாக இருந்தார்.

அத்துடன், தேர்தல் திகதி தொடர்பான கணிப்புக்களைச் செய்வதற்காக தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவும் அழைக்கப்பட்டிருந்தார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மைத்திரியை சந்தித்தது உண்மை மகிந்த தேசப்பிரியவும் இருந்தார்

## மல்கம் ரஞ்சித் ஒப்புதல்



(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட அன்று இரவு, ஜனாதிபதி செயலகத்துக்கு தான் சென்றதை ஒப்புக் கொண்டுள்ள கத்தோலிக்கத் திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், அங்கு தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரியவும் இருந்தார் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் கடந்த 9ஆம் திகதி வரையப்பட்ட போது, ஜனாதிபதியின் செயலகத்தில், கர்தினால் மல்கம் ரஞ்சித், முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா ஆகியோர் இருந்தனர் என்றும், தேர்தல் நாள் பற்றிக் கணக்கிடுவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவும் அழைக்கப்பட்டிருந்தார் என்றும் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

நாடாளுமன்றக் கலைப்புச் சதிக்குப் பின்னால் இந்த மூவரும் இருந்தனர் என்ற குற்றச்சாட்டு வெளியானதை அடுத்து, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நேற்று முன்தினம் இரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், கடந்த நவம்பர் 9 ஆம் திகதி இரவு தான் ஜனாதிபதி செயலகத்துக்கு சென்றது உண்மை என்றும், அங்கு மகிந்த தேசப்பிரிய இருந்ததைக் கண்டதாகவும் எனினும், சரத் என் சில்வா அங்கு இருக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியைத் தான் அன்று சந்தித்த போதும், நாடாளுமன்றக் கலைப்பு குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தானும், இத்தபனே தம்மாலங்கார தேரரும் தயாராக இருப்பதாக ஜனாதிபதியிடம் கூறியதாகவும் அதற்கு இணங்கியிருந்த அவர், திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டார் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். இது தம்மை ஏமாற்றிய நடவடிக்கை என்றும் அந்த அறிக்கையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார். (இ-7)

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்த கார் இருவருக்குப் பலத்த காயம்



(கொழும்பு)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஹற்றனிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற கார் ஒன்று நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியின் நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதி பகுதியில் குறித்த கார் வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி காரில் நான்கு பேர் பயணித்துள்ளதாகவும் அதில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதோடு மேலும் இருவர் சிறு சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக நானுஓயா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சட்டமும் தண்டனையும்

ஒருத்தர் இருந்தார்!

எதுக்கு எடுத்தாலும் சட்டம் பேசுகிறவர். 'சட்ட நுணுக்கம் எல்லாம் என் விரல் நுனியிலே வச்சிருக்கிறேன்' என்பார்! அவர் எப்படி சொல்வார் என்றால்...

'சட்ட விடயம் எல்லாம் என் ஃபிங்கர் டிப்சில் வைத்து இருக்கிறேன்' என்பார். சரி அவர் விரல் நுனியில் என்ன தான் வைத்து இருக்கிறார் என்று பார்த்தேன்... நகம் தான் வைத்திருந்தார்... நீள நீளமா! வேற எதுவும் என் கண்ணுக்குத் தெரியவில்லை!

ஒரு வேளை அந்தக் கூரான நகத்தைத் தான் 'சட்ட பொயின்ட்' என்று சொன்னாரோ என்னவோ! அவர் எப்படியாவது இருந்து விட்டுக் போகட்டும்! ஆனால் நாம் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு உண்மை என்ன தெரியுமா? சட்டம் எனக்குத் தெரியாது என்று சொன்னால் அதைச் சட்டமே ஏற்றுக்கொள்வதில்லை!

Ignorance of Law is not an excuse!

விளக்கு இல்லாமல் சைக்கிளில் போகிறோம்! பொலிஸில் எங்களைப்பிடித்துக் கொண்டு போய் நீதிமன்றத்தில் நிறுத்திவிடுகிறார்கள்!

அங்கே நாம்... 'விளக்கு இல்லாமல் சைக்கிளில் போவது தவறு என்று எனக்குத் தெரியாது' என்று சொன்னால் அதை அங்கே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! அதனால் – சட்டம் எனக்குத் தெரியாது என்று சாதாரண மனிதன் கூட சொல்ல முடியாது! அதைச் சட்டம் ஏற்றுக்கொள்ளாது! சட்டத்தை தெரிந்து கொள்ள வேண்டியது எங்களுடைய கடமை!

அதே மாதிரித்தான்... ஒரு குற்றத்துக்கு உடந்தையாக இருந்து விட்டு... அந்த குற்றத்தை நான் நேரடியாக செய்யவில்லை... அதனால் என்ன விட்டுவிடுங்கள் என்று சொன்னால் கேட்கமாட்டார்கள்! சட்டத்தின் கீழ்... குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை உண்டு! குற்றம் செய்வதற்கு உதவியாக இருந்தவர்களுக்கும் தண்டனை உண்டு!

குற்றத்துக்கு உதவியாக இருப்பது என்றால் என்ன? சட்டம் என்ன சொல்லுகிறது தெரியுமா? ஒரு நபரை குற்றம் செய்யுமாறு தூண்டுதல்; ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் கூடி சதி செய்து அந்த சதியின் விளைவாக ஒரு சட்ட விரோதமான காரியத்தைச் செய்வது அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பது; வேண்டுமென்றே ஒரு குற்றச் செயல் செய்வதற்கு அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்கு உதவி செய்வது ஆகியவற்றைக் 'குற்றத்துக்கு உதவியாக இருத்தல்' என்று சட்டம் சொல்கிறது. விளங்கிவிட்டதா?

இன்னொரு விபரத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்; 'ஒரு குற்றத்துக்கு உடந்தையாக இருந்து வேறொரு குற்றம் செய்யப்பட்டால் அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருந்தவருக்கு செய்யப்பட்ட குற்றத்திற்குப் பொறுப்பு சார்வதுடன் தாமே அந்தக் குற்றம் புரிவதற்கு நேரடி உடந்தையாக இருந்ததாகவும் கொள்ளப்படும்.'

அதனால் முக்கியமாக புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்... விசத்தை நேரடியாக ஒருதருக்குக் கொடுத்தாலும் ஒன்றுதான் இன்னொருத்தரிடம் கொடுத்துக் கொடுக்கச் சொன்னாலும் ஒன்று தான்! தண்டனையை அனுபவிச்சே தீரவேண்டும்.

தண்டனையில் இருந்து தப்பிப்பதற்கு என்னன்னமோ சாமர்த்தியமாக வாதாடிப் பார்க்கலாம்! இருந்தாலும் சட்டம் அதை ஒத்துக் கொள்ளாது.

ஒருத்தன் இப்படித்தான் ஒரு தவறு செய்துவிட்டான். தவறு என்றால் சாதாரண தவறு இல்லை! பெரிய குற்றம் கொலைக் குற்றம்! அதாவது ஒரு மகன் அவனுடைய அப்பாவையும் அம்மாவையும் கொன்றுவிட்டான்!

நீதிமன்றத்தில் அவனுக்கு மரண தண்டனை நிச்சயம் ஆகிவிட்டது! கடைசியாக நீதிபதி அவனைப் பார்த்து 'நீ கடைசியாக உன் தரப்பில் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லிக்கொள்ளலாம்' என்றார்.

அந்தப் பையன் சொன்னான், 'ஐயா! நீதிபதியே! எங்கள் அப்பாவையும் அம்மாவையும் நான் தான் கொன்றேன்! அதை ஒத்துக் கொள்கிறேன். அப்போது ஏதோ ஒரு ஆத்திரத்தில் அப்படிச் செய்து விட்டேன்! ஆனால் இப்போது... அப்பா அம்மா மேலே அளவு கடந்த பாசம் எனக்கு உண்டாகிவிட்டது... அது மட்டுமல்ல இப்போது நான் தாய் தந்தை இல்லாத அநாதை! இப்போதெல்லாம் எந்த நேரமும் அவர்கள் நினைப்பாகவே இருக்கின்றேன். அதனால் இந்த விடயத்தைப் பரிசீலனை செய்து என்னை விடுதலை செய்ய வேண்டும்' அப்படி என்றான்.

எல்லாவற்றையும் நீதிபதி பொறுமையாகக் கேட்டுக்கொண்டார். கடைசியாக இப்படி தீர்ப்புச் சொன்னார். எப்படித் தெரியுமா?

'இந்தப் பையன் குற்றத்தை ஒத்துக்கொண்டான். அதே நேரத்தில் இப்போது தன்னுடைய தாய் தந்தை மேல் அளவு கடந்த பாசம் வைத்திருக்கின்றான். அதைத் தவிர தான் அநாதையாக இருக்கிறேன் என்னும் நினைப்பு வேற இருக்கு... இதையெல்லாம் கருணையுடன் பரிசீலனை செய்து பார்த்ததில்... அவனை அவங்க அப்பா அம்மா இருக்கிற இடத்துக்கே அனுப்பி வைக்கிறதுதான் நல்லது... அதனாலே மரண தண்டனை வழங்குகிறேன்' என்றார்!

பையனும் அவனுடைய அப்பா அம்மாவிடம் போய்ச் சேர்ந்தான்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2018-15.12.2018

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## தேவைகள் பூர்த்தியாகும்!






விளம்பி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் ராசியிலேயே வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். அவரோடு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனும் வக்கிர இயக்கத்தோடு இணைந்து உலா வருகிறார். புதனும், சுக்கிரனும் இணைந்து சஞ்சரிப்பதால் புத-சுக்கிர யோகம் உருவாகிறது. எனவே பூமி வாங்கும் யோகம், பொருளாதார உயர்வு, புதிய முயற்சிகளில் வெற்றி போன்றவை தேடி வரும் நேரம் இது. ஆனால் இரண்டு கிரகங்களும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால், அவையெல்லாம் கொஞ்சம் தாமதமாகலாம். புதன், சுக்கிரன் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு, படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும்.

2ஆம் இடத்தில் சூரிய பகவான் சஞ்சரிக்கிறார். அவரோடு 3, 6இற்கு அதிபதியான குருவும் இணைந்திருப்பதால் மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். வழக்குகளும், வாய்தாக்களும் தசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு வந்துசேரும்.

'துலாத்தோன் எவ்விடத்தும் துவளான்' என்பது பழமொழி. நீங்கள் துவண்டு போகமாட்டீர்கள். பிரச்சினைதளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவீர்கள். இம்மாதம் சுக ஸ்தானத்தில் கேதுவும், 10இல் இராகுவும் சஞ்சரிக்கிறார்கள். சகோதர ஸ்தானத்தில் சனி பகவான் வீற்றிருக்கிறார். பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால் பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். புதிய திருப்பங்கள் உருவாகும். வீண் பழிகள் உங்களை விட்டு அகல நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு திருப்தி அளிக்காது. உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு திடீர் இடமாற்றங்களோ, இலாகா மாற்றங்களோ உருவாகலாம்.

இம்மாதம் முழுவதும் குரு பகவான் அஸ்தமனத்தில் இருக்கிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகவான் பகை கிரகமாவார். அவர் அஸ்தமனம் பெற்றுச் சஞ்சரிக்கும் பொழுது, நடைபெறாத சில காரியங்கள் கூட நடைபெறும். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப குருவின் சஞ்சார நிலை இருப்பதால், வியாழன் தோறும் குருபகவானை வழிபடுவதோடு வெள்ளிக்கிழமை தோறும் சுக்கிர பகவானையும் வழிபட்டால் தடைக்கற்கள் படிக்கற்களாக மாறும்.

இம்மாதம் திருக்கார்த்திகை தீபம் வருவதால் இல்லத்திலும், ஆலயங்களிலும் தீபம் ஏற்றி வைத்து, முருகப்பெருமான் சந்நிதியில் கவசம் பாடி வழிபட்டால் காரியத் தடைகள் அகலும்.

**புதனின் வக்கிர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மாதத் தொடக்கத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். நவம்பர் 24ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். பிறகு டிசெம்பர் 8ஆம் திகதி விருச்சிக்த்திற்குச் செல் கிறார். இதன் விளைவாக மனக் குழப்பங்கள் அகலும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். உதாசீனப் படுத்திய உறவினர்கள் உங்களோடு வந்திணைய ஆர்வம் காட்டுவர். நிதிப் பற்றாக்குறை அகலும். கட்டடம் கட்டும் முயற்சி அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் முயற்சியில் இறங்குவீர்கள். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டு. உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த சலுகைகள் இப்பொழுது கிடைக்கலாம். ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் ஆசை நிறைவேறும்.

**சுக்கிரனின் வக்கிர நிவர்த்திக் காலம்!**

இக்காலம் ஒரு பொற்காலமாகும். சுக்கிரனின் வக்கிர இயக்கத்தோடு இம்மாதம் தொடங்கினாலும், நவம்பர் 30ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தியாகிறார். இராசிநாதன் சுக்கிரன் பலம்பெறும் இந்தநேரத்தில் உங்கள் பணத்தேவை பூர்த்தியாகும். பாராட்டும், புகழும் கூடும். வியாபாரம் வெற்றி நடைபோடும். மனதளவில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**குருவின் சஞ்சார நிலை!**

குரு பகவான் மாதத் தொடக்கத்தில் இருந்து மாதம் முடியும் வரை அஸ்தமன நிலையில் இருக்கிறார். இருப்பினும் அவர் லாபாதிபதி சூரியனுடன் இணைந்து, தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். அரசு வழிப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் முயற்சியில் அனுகூலங்கள் உண்டு. எதிரிகள் பலம் குறையும் இந்த நேரத்தில், உங்கள் எண்ணங்கள் அனைத்தும் வெற்றிபெறும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். குரு உங்கள் இராசிக்கு 3, 6இற்கு அதிபதி. சகோதர ஸ்தானாதிபதி வலிமை இழக்கும் பொழுது, உடன்பிறப்புகளின் குணம் மாறலாம். புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

இம்மாதம் துர்க்கை, காளி போன்ற தெய்வங்களை வழிபடுவதன் மூலம் துயரங்களில் இருந்து விடுபட இயலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன் - மனைவிக்குள் கனிவு கூடும். மனம் ஒன்றிச் செயற்பட்டு மாற்றுக் கருத்துடையோரை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சுக்கிரன் வக்கிர நிவர்த்தியானதும் கல்யாணக் கனவுகள் நனவாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். நெருங்கிய சொந்தங்கள் உங்கள் நிகழ்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய முன்வருவர். தட்டிச் சென்ற வாய்ப்புகள் தானாக வந்துசேரும். பிள்ளைகளின் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். வாகன யோகம் உண்டு. பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட பகை மாறும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

## தனவரவு தாராளமாக வந்து சேரும்!






விளம்பி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சஞ்சரித்து தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறார். தொழில் ஸ்தானாதிபதி சூரியன் தன பஞ்சமாதிபதியான குருவோடு இணைந்து உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே இம்மாதம் இனிய மாதமாகும். எடுத்த காரியங்கள் அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு தனக்கென ஒரு தனி முத்திரை பதிப்பீர்கள்.

தனாதிபதி குரு உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பணவரவு அதிகரிக்கும். தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். செய்தொழிலில் கூடுதல் வருமானம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துகளில் பாகப் பிரிவினையாகி அதன் மூலமும் ஒரு பெரும் தொகை உங்களுக்கு கிடைக்கலாம். அவற்றைக் கொண்டு ஒரு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நடக்கும் தொழிலில் கிளைத் தொழில் தொடங்கும் முயற்சியும் கைகூடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். பணிநிரந்தரம், உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு, எதிர் பார்த்த சலுகைகள் அனைத்தும் கிடைக்கும் நேரம் இது. வளர்ச்சி அதிகரிக்கும் இந்த நேரத்தில் சொத்துகள் வாங்கும் முயற்சியிலும் சொந்தங்களுக்கு கொடுத்து உதவும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீரக்ள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதித் தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். துணிச்சலான சில முடிவுகளை எடுத்து அருகில் இருப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீரகள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

புதன் வக்கிரம், சுக்கிரன் வக்கிரம், குரு அஸ்தமனம் ஆகியவற்றோடு பிறக்கும் இம்மாதத்தில் வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் கல்யாணச் சீர்வரிசைகள், ஆபரணங்கள் வாங்கும் யோகம் அனைத்தும் கைகூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கூட கிடைக்கலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மைகள் அதிகம் நடைபெறும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவழிபாட்டை மேற்கொண்டால் பணப்புழக்கம் அதிகரிக்கும். புதன்கிழமை தோறும் பெருமாளை வழிபடுவதன் மூலம் புதிய பாதை புலப்படும். உறவினர்களின் உதவி கிடைக்கும். அனுமனை வழிபடுவதன் மூலம் செய்த முயற்சிகளில் ஜெயம் உண்டாகும். மேலும் இம்மாதம் பரணி தீபமும், கார்த்திகைத் திருநாளும் வருகிறது. அன்றைய தினம் இல்லத்திலும், ஆலயத்திலும் தீபம் ஏற்றி வைத்து முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் முன்னேற்றத்தின் முதல் படிக்கு செல்லலாம்.

**புதனின் வக்கிர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மாதத் தொடக்கத்தில் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். நவம்பர் 24ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். அதன்பிறகு டிசெம்பர் 8ஆம் திகதி விருச்சிகத்திற்குச் செல்கிறார். இதன் விளைவாகப் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று தரிசிக்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தேகநலன் சீராகும். உங்களின் திறமை பளிச்சிடும். நம்பிக்கைக்குரியவர்கள் நல்ல தகவலைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.

**சுக்கிரனின் வக்கிர நிவர்த்திக் காலம்!**

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நவம்பர் 30ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். அப்போது புத-சுக்கிரயோகம் செயற்படுகிறது. எனவே பொன், பொருள் வாங்கும் முயற்சியும், சொத்துகள் வாங்கும் வாய்ப்பும் உருவாகும். வெளிநாடு செல்லும் முயற்சி எண்ணியபடி கைகூடும். ஒருசிலருக்கு வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வரலாம். தாய் மற்றும் சகோதரிகளின் ஆதரவு கிடைக்கும். கல்விக்காகவும், கலை சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும் நேரம் இது. சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**குருவின் சஞ்சார நிலை!**

உங்கள் இராசிக்கு தன, பஞ்சமாதிபதியான குரு பகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். அதோடு தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்திருப்பதால் தொழில் முன்னேற்றம் கூடும். தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அதே சமயத்தில் குரு அஸ்தமனத்திலும் இருக்கிறார். எனவே மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். உற்றார், உறவினர்களை மட்டுமல்லாமல் நண்பர்களையும் அனுசரித்துச்செல்ல வேண்டிய நேரம் இது. கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. இம்மாதம் ஞாயிறு தோறும் விநாயகப் பெருமானையும் வியாழ பகவானையும், சூரிய பகவானையும் ஒருசேர வழிபடுவது நல்லது.


**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

தொட்டது துலங்கும் மாதம் இது. துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பாசம் மிகுந்த உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. சுக்கிரனின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். புதியதாக ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். தாய் மற்றும் உடன்பிறப்புகளின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு உத்தியோகத்தில் உயர்வும், ஊதியத்தில் உயர்வும் பெறுவீர்கள். குலதெய்வ வழிபாடும், குரு வழிபாடும் நன்மையை வழங்கும்.

(தொடரும்)

# "தனிப்பட்ட விசுவாசத்தை வெளிப்படுத்தினால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும்"

## சபாநாயகருக்கு மகிந்த அணி பகிரங்க மிரட்டல்



(கொழும்பு)

**பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகளையும், பாரம்பரிய கோட்பாடுகளையும் பின்பற்றாமல் சபாநாயகர் கரு ஜெயசூரிய ஐக்கிய தேசிய கட்சிக்கான தனிப்பட்ட விசுவாசத்தை இன்றும் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்துவராயின் பாரிய விளைவுகள் சந்திக்க நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க எச்சரித்துள்ளார்.**

அத்துடன் பாராளுமன்றத்தில் ஏற்படும் கொலை கலவரத்திற்கு துணை போன சபாநாயகர் மீது விசாரணைகள் முன்னெடுக்கப் பட வேண்டும்.

தேர்தல்களில் போட்டியிட்டால் தாம் படுதோல்வியடைவோம் என்ற காரணத்தினாலே மக்கள் விடுதலை முன்னணியினரும், தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளித்து இடைக்கால அரச செல்வாக்குகளை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக பிரிட்டன் பாராளுமன்றத்தில் விவாதம்

## நாடு கடந்த தமிழீழ அரசு தீவிரம்

(லண்டன்)

எதிர்வரும் 2019 மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (International Criminal Court) பரிந்துரை செய்யக் கோரியும், பிரித்தானிய பாராளுமன்றத்தில் இது தொடர்பாக விவாதம் ஒன்றை ஏற்பாடு செய்யக்கோரியும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களை தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றது.

அந்த வகையில் South Croydon தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சிரிஸ் பிலிப் நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்களுக்கும் இடையில் கடந்த 16 ஆம் திகதி சந்திப்பொன்று இடம் பெற்றது.



நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் மற்றும் விளையாட்டு மற்றும் சமூக நலன் பேணும் பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கத்தினுடைய நெறிப்படுத்தலில் செயற்பாட்டாளர்களான நுஜிதன் இராசேந்திரம், பபிகரன் சுந்தரராசா, பொன்ராசா புவலோயன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்புக்களில் யுத்த குற்றத்தில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் இலங்கை பிரதமராக பதவியேற்றமை தொடர்பாகவும் வட கிழக்கு ஒன்றிணைப்பு மற்றும் சமஷ்டி ஆட்சி என்பன தான் உயிருடன் இருக்கும் வரை ஒரு போதும் நிகழாது என ஜனாதிபதி மைத்திரி கூறியது பற்றியும் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் பற்றியும் இதனால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் சாதக பாதக நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் நடைபெற்றது.

அது மட்டுமல்லாமல் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு (international criminal court) பரிந்துரைப்பதற்கான மனுவொன்றும் கையளிக்கப்பட்டதுடன் இலங்கையின் நீதிப்பொறியமைவுகளை கண்காணிக்கும் பொறுப்புடைமைக்கான சர்வதேச நிபுணர்குழுவின்(Sri Lanka Monitoring and Accountability Panel) அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் தமிழ் அரசியற் கைதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்த் தொடரும் கட்டுப்பாடில்லாத தடுத்து வைப்பு, தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவிலான பாதுகாப்புப் படைகள் நிலைகொண்டுள்ளமை மற்றும் இத்தீவின் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்திலுள்ள தனி யார் காணிகளில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தரித்திருக்கின்றமை ஆகியவற்றை கண்காணிப்பதன் பொருட்டு இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையிடும் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் இது தொடர்பாக வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகளின் வெளியுறவு செயலாளருடனும், ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய அமைச்சருடனும் இது குறித்து கலந்துரையாடுவதாகவும் பிரிட்டன் எம்.பி. உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## 25 மில்லியன் ரூபாய் பெறுமதியான 2 கிலோ 79 கிராம் ஹெரோயின் காரிலிருந்து மீட்பு -ஒருவர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை குற்றப் பிரிவுப் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவில் பரடைஸ் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் 2 கிலோ 79 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளின் பெறுமதி 25 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. டிமெல்வத்த கிராண்ட் பாஸை சேர்ந்த 33 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 7 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தர விடப்பட்டுள்ளது. (இ-7)

## "பாராளுமன்றம் கேலிப் பொருளாக மாறியமைக்கு சபாநாயகரே காரணம்"

இலங்கை அரசியல் வரலாற்றில் பாராளுமன்றத்தினை சர்வதேசத்தின் மத்தியில் சபாநாயகர் கரு ஜெயசூரியவே கேலிப் பொருளாக மாற்றியமைத்து விட்டார் என குற்றம்சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, பாராளுமன்றத்தில் கலகம் அரசாங்க தரப்பினரால் ஏற்பட்டாலும் அதற்கு மூல காரணம் சபாநாயகரே எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இன்று காலை பிரதமர் தலைமையில் இடம்பெறவுள்ள சந்திப்பின் பின்னரே பாராளுமன்றத்துக்கு சமூகமளிப்பதா அல்லது புறக்கணிப்பதா என்பது தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)





அமரர் இரத்தினம் கமலதேவி ஞாபகார்த்த புலமைப்பரீட்சை பரிசளிப்பு வழங்கலும் சாதனையாளர் கௌரவிப்பும் நேற்று முன்தினம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் சிறப்பு விருந்தினராக பிரதிக்கல்வி பணிப்பாளர் யோ.ரவீந்திரன்,வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் வே.சிவயோகன், க.தர்மலிங்கம் மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை உப தவிசாளர் க.பொன்னையா, மக்கள் வங்கியின் நெல்லியடி கிளை முகாமையாளர் கலைவாணி குணசீலன், கரவெட்டி கோட்ட கல்விப் பணிப்பாளர் கே.கே.யோகநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




மேலும் 1671 இல் 142357 பேர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்ததாக மேற்படி கிறிஸ்தவ ஆவணத்தினூடாகவும் சுமார் 145000 மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்தார்கள் என்ற 1680 இல் எடுக்கப்பட்ட புள்ளிவிபர அறிக்கையின்படியும் கால இடைவெளியைக் கருத்திற் கொண்டு பார்க்கும் பொழுது ஓரளவு நம்பகத்தன்மை கொண்டதாகவும் அநேகமாக ஒத்திருப்பதையும் அறிய முடிகிறது.

எது எப்படியிருப்பினும் இவ்வாறான ஒரு ஆரம்ப முயற்சியின் போது பல தவறுகள் ஏற்படச் சந்தர்ப்பம் இருந்திருக்கும். சில கிராமங்களில் உள்ள மக்களின் தொகை இப் புள்ளி விபரங்களில் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருந்திருக்கலாம். அல்லது மேற்படி புள்ளி விபரங்கள் செம்மையாகச் செய்யப்படாமல் ஒரு ஆரம்பகட்ட முயற்சியாக இருந்திருக்கலாம்.

இருந்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்படி கால கட்டங்களில் வாழ்ந்த சனத்தொகையை ஓரளவேனும் அறிந்து கொள்வதற்கும் தொடர்ச்சியாக வருகின்ற காலகட்டங்களில் அச்சனத்தொகை எவ்வளவு விகிதாசாரத்தில் அதிகரித்துக்கொண்டு போயிருக்கும் என அனுமானிப்பதற்கும் மேற்படி புள்ளிவிபரங்கள் முக்கியம் வாய்ந்தவையாகும்.

இச்சந்தர்ப்பத்தில் 1745 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிபர அட்டவணையை இங்கு சற்று விபரமாகத் தருவதன்மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்படி கால கட்ட சனத்தொகை பற்றிய ஒரு மேலெழுந்தவாரியான விளக்கத்தையும் தெளிவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகை புள்ளிவிபரம் 11.11.1745- 28.02.1746

**வலிகாமம்**

| கிராமம் | மக்கள் தொகை |
|---|---|
| தெல்லிப்பழை | 3832 |
| மயிலிட்டி | 3414 |
| புத்தூர் | 1909 |
| அச்சுவேலி | 2068 |
| கோப்பாய் | 2738 |
| நல்லூர் | 3700 |
| சென்.ஜோன்ஸ் | 2819 |
| வண்ணார்பண்ணை | 2827 |
| மானிப்பாய் | 3138 |
| மல்லாகம் | 2783 |
| பண்டத்தரிப்பு | 3594 |
| சங்கானை | 3796 |
| வட்டுக்கோட்டை | 3488 |
| உடுவில் | 2934 |

“ கண்டி மன்னனுக்கும் டச்சுக்காரருக்கும் இடையில் அடிக்கடி நடைபெற்ற போர் நடவடிக்கைகளினால் திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் 1687கள் வரை அங்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி அதனூடாக அங்குள்ள மக்கள் பற்றிய புள்ளிவிபரங்களை டச்சுக்காரரினால் எடுக்க முடியாது போயிருக்கும் ”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

**வடமராட்சி**

| கிராமம் | மக்கள் தொகை |
|---|---|
| கரவெட்டி | 5765 |
| பருத்தித்துறை | 5611 |
| உடுப்பிட்டி | 4421 |

**தென்மராட்சி**

| கிராமம் | மக்கள் தொகை |
|---|---|
| நாவற்குழி | 2381 |
| சாவகச்சேரி | 6478 |
| கச்சாய் | 3077 |
| எழுதுமட்டுவாழ் | 3126 |
| வரணி | 5495 |

**பச்சிலைப்பள்ளி**

| கிராமம் | மக்கள் தொகை |
|---|---|
| புலோப்பளை | 852 |
| முள்ளிப்பற்று | 887 |
| தம்பகாமம் | 1212 |
| முகமாலை | 1964 |

**தீவுப்பகுதி**

| கிராமம் | மக்கள் தொகை |
|---|---|
| காரைதீவு | 3139 |
| ஊர்காவற்றுறை | 1899 |
| வேலணை | 1055 |
| அல்லைப்பிட்டி | 656 |
| புங்குடுதீவு | 1099 |
| நயினாதீவு | 436 |
| அனலைதீவு | 812 |
| நெடுந்தீவு | 260 |
| இரணைதீவு | 170 |

**வன்னி எல்லைகள்**

| கிராமம் | மக்கள் தொகை |
|---|---|
| பூநகரி | 1871 |
| பல்லவராயன்கட்டு | 323 |
| இலுப்பைக்கடவை | 613 |
| பிரிங்கல்லி | 297 |

மன்னார், வன்னி, கற்பிட்டி, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தொகை பற்றிய புள்ளி விபரங்களை அறிவதிற் சிரமங்கள் காணப்படுகின்றன. ஆனால் 1671 ஆம் ஆண்டு டச்சு அறிக்கையின்படி மன்னாரில் 9131 பேரும் வன்னிப் பிரதேசத்தில் 4316 மக்களும் வாழ்ந்ததாக அறியமுடிகிறது.

கண்டி மன்னனுக்கும் டச்சுக்காரருக்கும் இடையில் அடிக்கடி நடைபெற்ற போர் நடவடிக்கைகளினால் திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் 1687கள் வரை அங்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி அதனூடாக அங்குள்ள மக்கள் பற்றிய புள்ளி விபரங்களை டச்சுக்காரரினால் எடுக்க முடியாது போயிருக்கும்.

மேலும் திருகோணமலைப் பிரதேசத்தில் ஆங்கிலேய, பிரெஞ்சு வர்த்தகக் கம்பனிகளின் ஊடுருவல்களும் அவைகளை எதிர்த்து அவர்களின் தலையீட்டை இலங்கையிலிருந்து நீக்குவதற்கு டச்சுக்காரர் மேற்கொண்ட நடவடிக்கைகளும் போர்களும் மேற்படி நிர்வாக அறிக்கைகள், சனத்தொகை பற்றிய புள்ளிவிபரங்கள் ஆகியவற்றைத் திரட்ட முடியாமல் போனதற்கான காரணங்களாக இருந்திருக்கலாம்.

இருந்தும் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் டச்சுக்காரர் மதப்பரப்பல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் விளைவாக மேற்படி தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் தொகையையும் சிறிதளவேனும் அறியமுடிகிறது.

மேலே பார்க்கப்பட்டது போல யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்திலும் வாழ்ந்த தமிழர்களின் சனத்தொகைக்கும் அதே பிரதேசங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைக்கும் பெரியளவில் வித்தியாசம் காணப்படவில்லை என்பது பற்றி ஏற்கனவே எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

ஆனால் வன்னிப் பெரு நிலப்பரப்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்களை இலகுவாகக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்ற டச்சுக்காரரினால் முடியவில்லை என்பதனை அவர்களின் ஆரம்ப கால அறிக்கைகளிலுள்ள புள்ளி விபரங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

(தொடரும்)

# தமிழர்கள் பலமாக இருந்தால் தான் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு பலமாக இருக்கும்-த.தே.ம.மு.

(ஏறாவூர்)

இலங்கைத்தீவிலே தமிழர்கள் பலமாக இருந்தால் தான் இந்திய தேசத்தின் பாதுகாப்பிற்குப் பலமாக இருக்கும். இதனை விளங்கிக்கொண்டு தாங்கள் தவறு இழைத்து விட்டோம் என இந்திய தேசம் சிந்திக்க வேண்டிய காலம் இந்தக் காலம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பு கரடியனாறு கொடுவாமடு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தி.யகேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடுவாமடு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"எல்லாரும் நினைத்தார்கள் 2009 மே 18 உடன் போராட்டம் முடிந்தது தமிழ் மக்களின் இலட்சியப் பாதை முடிந்தது எனக் கனவு கண்டார்கள். ஆனால் அது தலைகீழாக மாறி இன்று வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களும் மக்களால் துப்புரவாக்கப்பட்டு எழுச்சி பெற்றுள்ளன.

இந்த மக்களின்தியாகத்தை யாராலும் ஈடுசெய்ய முடியாது. அவர்களது இலட்சியம் என்பது மிகவும் உயர்ந்தது. அவர்களது இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புடையவர்களாக நாங்கள் அனைவரும் இருக்கின்றோம்.

இன்று இந்த நாடாளுமன்றம் படும் பாட்டைப் பார்த்தால் உலகத்திற்கே தெரியும் பதவிக்காக தங்களுக்குள்ளே அடிபடுகின்றார்கள் என்று என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி மனைவியைக் கொன்ற கணவன்

(களுத்துறை)

களுத்துறை தெற்குப் பகுதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தனது மனைவியைத் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

களுத்துறைப் பாலத்திற்கு அருகிலுள்ள பூ விற்பனை செய்யும் நிலையம் ஒன்றில் இந்தக் கொலைச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறைத் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 43 வயது பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பைபிளை வீசவில்லை ஜோன்ஸ்டன் மறுப்பு



(கொழும்பு)

கடந்த 16ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழப்ப நிலைமையின் போது, தான் பைபிளை எடுத்து வீசியதாகக் கூறப்படும் செய்தியில் எவ்வித உண்மையுமில்லையென, கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழான எதிர்க்கட்சியினர் தான் தொடர்பில் சமூகவலைத் தளங்களில் பரப்பும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானதும் சேறு பூசும் செய்திகள் என்றும் அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## அரச சொத்துக்களை சேதப்படுத்தியவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை - கிரியெல்ல எச்சரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அரச சொத்துக்களைச் சேதப்படுத்தியவர்களுக்கு எதிராக, குற்றவியல் சட்டத்துக்கமைய, சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்துக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றுவதற்கு மாத்திரமே சிறப்புச் சலுகை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச சொத்துக்களைச் சேதப்படுத்தியமை தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுப்பாரென்றும் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1561

### ராம்

உங்க வீட்டுக்காரர் தீபாவளிக்கு உனக்கு என்ன வாங்கிக் கொடுத்தார்?



எனக்கு எங்க் வாங்கிக் கொடுத்தார்? அவருக்குத்தான் ஒரு கிரைண்டர் வாங்கிக்கிட்டார்

### சரண்

மாமா... இப்படியே வெளிய போகாதீங்க மாமா



குண்டு பட்டாசுன்னு பசங்க தலையில பத்த வைச்சிடப்போறாங்க... ப்ளீஸ் மாமா

### பிரசாத்

லவ்வுல அரிச்சந்திரனா இருந்தாக்கூட பொய் சொல்லித்தான் ஆகனும்



கல்யாணத்துல அர்னால்டா இருந்தாக்கூட அடி வாங்கித்தான் ஆகனும்

### சிரஞ்சீவி

இப்ப எல்லாம் யாராவது அறிவுரை சொன்னால் காதை மூடத் தேவையில்லை



மொபைலை நோண்டினாலே போதும் டீசன்டா புரிஞ்சுக்கிட்டு போயிடுவாங்க

### ராஜ்குமார்

ஏன்டா பாம்புப் புத்துல பிஸ்கட்ட போட்ட



அந்த பிஸ்கட்டில பால் இருக்கிறதா டி.வில சொன்னாங்கண்ணே

### அஜந்தன்

நாம் சரியாகப் பேசினாலும் தவறாகப் புரிந்து கொள்ளும் உறவுகளுக்கு மத்தியில்




நாம் தவறாகப் பேசினாலும் சரியாகப் புரிந்து கொள்ளும் ஒரே ஒரு ஜீவன் Google தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்களின் எதிர்காலத்தையும் சூழலையும் விற்க வேண்டாம்

## கொழும்பு குப்பைகளை புத்தளத்தில் கொட்ட எதிர்ப்பு

(புத்தளம்)

கொழும்பு குப்பைகளை புத்தளத்தில் கொட்டும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, புத்தளம் மக்கள் நேற்று முன்தினம் காலை முதல் ரயில் பாதையை மறைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வமதத் தலைவர்களின் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புத்தளம் வான் சந்தியில் இருந்து ஊர்வலமாக மணல்குன்று ஜிஹாத் பள்ளிக்கு அருகாமையிலுள்ள ரயில் கடவை வரை நடந்து சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், பின்னர் ரயில் பாதையை மறைத்து மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால், அருவக்காடு பகுதியில் இருந்து பாலாவி சீமெந்து தொழிற்சாலைக்கு சுண்ணாம்புக்கல்லை ஏற்றிச் செல்லும் ரயில் போக்குவரத்தும் தடைப்பட்டன.

கொழும்பு குப்பைகளை புத்தளத்தில் கொட்டும் அரசாங்கத்தின் திட்டங்களை உடனடியாக கைவிடுமாறு கோரி புத்தளத்தில் 50 ஆவது நாளாக சுழற்சி முறையிலான சத்தியாக்கிரக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில், கொழும்பில் இருந்து புத்தளத்துக்கு கொண்டுவரப்படும் குப்பைகளை புத்தளம் இன்சீ சீமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமான பாரிய குழிகளில் கொட்டுவதற்காக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் எனக் கோரி ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் மற்றும் சிறுவர்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் ரயில் பாதையில் அமர்ந்து கொண்டு தமது எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

கொழும்பு குப்பைகளை புத்தளம் - அருவக்காட்டு குழிகளில் கொட்டுவதற்கு பல மில்லியன் அமெரிக்க டொலருக்கு மக்களின் எதிர்காலத்தையும், சூழலையும் விற்க வேண்டாம் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன்போது, புத்தளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நாணயக்கார, புத்தளம் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் அநுர குணவர்த்தன தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர்.

அத்துடன், கலகம் அடக்கும் பொலிஸ் குழு தயார் நிலையில் காணப்பட்டது. அத்தோடு, புத்தளம் பொலிஸ் புலனாய்வு, விமானப்படை புலனாய்வு பிரிவு, இராணுவ புலனாய்வு பிரிவு, கடற்படை புலனாய்வு பிரிவு, பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவு, தேசிய புலனாய்வுப் பிரிவினரும் குவிக்கப்பட்டனர்.

இதேவேளை, ரயில் பாதையை மறைத்து போராட்டம் நடத்தியவர்களுடன், சம்பவ இடத்துக்கு வருகை தந்த புத்தளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நாணயக்கார கலந்துரையாடினார். இதன்போது, பொலிஸாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

கொழும்பு குப்பைகளை புத்தளம் அருவக்காட்டுப் பகுதியில் கொட்டுவதற்கு மில்லியன் கணக்கில் பணத்தை வாங்கிவிட்டு அனுமதி வழங்கிய இன்சீ (INSEE) சீமெந்து தொழிற்சாலை அலுவலக பிரதானிகள் இங்கு வருகை தந்து உத்தரவாதம் தரும் வரை இந்த இடத்தை விட்டு போகமாட்டோம் என போராட்டக்காரர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு வருகை தந்த ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார்.

குப்பை பிரச்சினை தொடர்பில் தானும், முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனும் சந்தித்துப் பேசியதாகவும் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், இந்தப் பிரச்சினை தொடர்பில் மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்து தருவதாகவும் கூறினார்.

இதேவேளை, மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந்த திட்டம் முன்னெடுக்க தான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் இதன்போது கூறினார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களின் வேண்டுகோளையடுத்து, இன்சீ சீமெந்து தொழிற்சாலை அதிகாரிகள் சிலர் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

எனினும், வருகை தந்த அதிகாரிகளின் கருத்துக்கள் தொடர்பில் தமக்கு பூரண திருப்தி இல்லை எனவும் உயர் அதிகாரிகளை அழைத்துக்கொண்டு வருமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த அதிகாரிகளிடம் தெரிவித்து திருப்பி அனுப்பியதுடன், தமது போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்தனர். (இ-7)

# விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கும் திட்டம்

(கொழும்பு)

செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதை நெல் வழங்குவதற்குரிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

## பேருந்து குடைசாய்ந்தது



(கொழும்பு)

கொழும்பிலிருந்து பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து நேற்று அதிகாலை விபத்திற்கு உள்ளாகியுள்ளது. குறித்த விபத்து திருகோணமலை, கல்லோயா பகுதிக்கும் அக்போபுர பகுதிக்கும் இடையே இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்து, எருமை மாடொன்றுடன் மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருகிறது.

இதன் பின்னர் அந்த பேருந்து குடைசாய்ந்துள்ளது. எனினும் உயிர் ஆபத்துக்கள் எதுவும் இல்லை எனவும், 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 160 | 240 |
| தக்காளி | 250 | 280 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 30 | 40 |
| கோவா | 120 | 180 | 200 | 200 |
| கரட் | 160 | 280 | 190 | 400 |
| பூசணி | 60 | 60 | 40 | 80 |
| புடோல் | 140 | 140 | 150 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 300 | 300 | 380 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 250 | 240 | 250 | 200 |
| லீக்ஸ் | 150 | 280 | 200 | 240 |
| பீற்றூட் | 120 | 140 | 60 | 200 |
| கறிமிளகாய் | 250 | 280 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 180 | 300 |
| போஞ்சி | 300 | 320 | 250 | 400 |
| கத்தரித்தம்புள்ள | 100 | 200 | 160 | 200 |
| கீரை-1பிடி | 60 | 50 | 30 | 60 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 45 | 25-40 |
| இராசவள்ளி | 250 | 300 | – | 200 |
| வெங்காயப்பூ | – | – | 120 | – |
| முள்ளங்கி | 100 | – | 30 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 50 | 15 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 25 |
| ஈரப்பலா | 60 | 50 | 120 | 100 |

# மழலைகள் கலைச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் மழலைகள் கலைச்சங்கம் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை அதிபர் கு.அசோக்குமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் நா.சிவனேசன் கலந்துகொள்வார். (இ-9-103)

# எந்தத் தேர்தல் வந்தாலும் களமிறங்கத் தயார்-நஷீர்



(ஏறாவூர்)

பாராளுமன்ற தேர்தலோ அல்லது மாகாண சபைத் தேர்தலோ எதனை முதலில் நடத்த ஏற்பாடு செய்தாலும் அந்த தேர்தலில் களமிறங்கத் தயார் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஷீர் அஹமட் தெரிவித்தார். சமகால அரசியல் கள நிலவரங்கள் சம்பந்தமாக தெளிவுபடுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களுடனான சந்திப்பு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் ஏறாவூர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதேச அரசியல் முக்கியஸ்தர்கள், ஏறாவூர் நகர முதல்வர், ஏறாவூர் நகரசபை ஸ்ரீல.மு.கா உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இக்கலந்துரையாடலின்போது சமுகமளித்திருந்தனர். அங்கு தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் முதலமைச்சர், தற்போதைய அரசியல் இழுபறி தொங்கு நிலைமையின்படி எப்படிப் பார்த்தாலும் பாராளுமன்றத்தைக் கலைப்பதே உசிதமானது எனும் முடிவுக்கு சர்ச்சைக்குரிய இருசாராரும் வரப்போகிறார்கள்.

அந்த வகையில் இன்னும் சில தினங்களில் தேர்தல் களங்கள் சூடுபிடிக்கப் போகின்றன.

வரவு- செலவுத் திட்டத்தை தோற்கடித்து தேர்தலுக்குப் போவதையே பிரதமர் மகிந்த தரப்பு விரும்பியிருந்தது. ஆனால், அதனையும் விட மிக இலகுவான வேறு வழிகளைக் கையாண்டு அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்கள்.

இந்த அரசியல் இழுபறிகளுக்குள் முஸ்லிம் சமூகம் மூக்கை நுழைத்துக் கொண்டு தடுமாற வேண்டியதில்லை.

எந்தத் தரப்பு வந்தாலும் அவர்கள் பேரினவாத சிந்தனையின் மைய நீரோட்டத்திலிருந்தே தோற்றம் பெற்றவர்கள் என்பதை ஊகித்தறிந்து கொள்வதற்கு அதிக நேரமெடுக்காது.

ஏனெனில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அனைவரது செயற்பாடுகளும் ஏதோ ஒருவகையில் இனவாத மையக் கருத்தின் வெளிப்பாடாகவே இருந்து வந்துள்ளதை இப்பொழுதும் காண்கின்றோம். இதற்கு முன்னரும் கண்டுள்ளோம்.

எனவே, உள்ளவற்றில் சிறிதளவாவது நல்லது உள்ள பக்கம் சமயோசிதமாக காய் நகர்த்தி நமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகள் பற்றிச் சிந்திப்பதே தற்போதைய காலகட்டத்தில் அறிவுடைமையாகும்.

கலப்புத்தேர்தல்முறையை ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியும் கொண்டு வந்த பயன்பாட்டைப் பற்றி விவரிப்பதாயின் அது "தங்கத் தட்டில் முஸ்லிம்களுக்கு பன்றி இறைச்சியைக்கொண்டு வந்து கையில் கொடுத்த சங்கதிதான்."

ஆனால், அதனையும் ஆராய்ந்து பார்க்காமல் நம் அரசியல்வாதிகள் "ஆமா சாமி" போட்டுவிட்டு பின்னர் ஒப்பாரி வைத்ததுதான் மிச்சம்.

எனவே, இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு பட்டறிவுப் பலத்தோடு கூடிய அரசியல் அதிகாரமும் சாணக்கியமும் தேவை.

அந்த அதிகாரத்தைப் பெற்று உரிய இடத்தில் ஆளுமை செலுத்தி சமூகத்திற்கு முடிந்ததைச் செய்தாக வேண்டும் என்ற நோக்கில் எதிர்வருகின்ற எந்தத் தேர்தலினும் களமிறங்குவதைத் தவிர வேறு வழியில்லை.


தேசியப் பட்டியல், போனஸ் ஆசனம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

காத்தான்குடியில் அமைச்சர் ஹிஸ்புல்லா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதியில் முன்னாள் பிரதிய மைச்சர் எம்.எஸ்.எஸ். அமீரலி தலைமையில் அகில இலங்கை மக்க் காங்கிரஸ்ம் இருக்கின்ற சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தளமாக இருக்கின்ற ஒரேயொரு களம் ஏறாவூர் தான்.

எனவே, இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தளத்தை உறுதிப்படுத்தி அரசியல் அதிகாரத்தைப்பெறவேண்டும்எனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# நீதி தவறிய மன்னன்



பாண்டிய நாட்டை ராசராசன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மனைவி ஓரளவிற்கு இசைஞானம் உடையவள் சிறந்த அழகியும் கூட. தனக்கிருந்த கொஞ்சநஞ்ச இசை ஞானத்தை வைத்துக் கொண்டே மிகுந்த பெருமையடைந்தாள் அரசியார். தன்னை மிஞ்சிய இசை ஞானமுள்ளவர்கள் யாரும் இல்லை என்பது அவள் எண்ணம்.

அரசியைப் புகழ்ந்து அவளது சிறப்பை பாராட்டியே தங்கள் காரியங்களை சாதித்துக் கொண்டது காக்கா கூட்டம் ஒன்று.

வருடா வருடம் கோயிலில் விழா நடைபெறும். அப்பொழுதெல்லாம் பாணபத்திரர் என்ற இசைக்கலைஞர் மிகவும் அழகாக இசை நிகழ்ச்சி நடத்துவார். அவர் இறந்த பின், அவரது மனைவி இறைவனைப் புகழ்ந்து பாடுவாள்.

ராசராசன் பதவிக்கு வந்த பிறகு, அவனது மனைவியான அரசியாரின் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

பாணபத்திரரின் மனைவி மிகுந்த வேதனை அடைந்தாள். "சரி! நமக்கு விதித்தது இவ்ளோதான்!" எனச் சிலகாலம் ஒதுங்கி இருந்தாள்.

அந்த வருடமும் வழக்கம் போல் திருவிழா வந்தது. இறைவனை எப்படியாவது பாடித் துதிப்பது என்று முடிவு செய்தாள். வழக்கம் போல் அரசியாரின் இசைக் கச்சேரி கோலாகலமாக நடைபெற்றது. மக்கள் இசையை ரசித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று ஜனங்கள் மெல்ல எழுந்து செல்ல ஆரம்பித்தனர். அதைக் கண்டதும் மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நடக்கிறது என்று பார்க்கச் சொன்னான்.

கோயிலில் ஒரு மூலையில் அமர்ந்து பாணபத்திரரின் மனைவி இறைவனைத் துதித்து பாடிக் கொண்டிருந்தாள். மக்கள் அவளது இசையில் மயங்கி அங்கே சென்றனர். இதைக் கேள்விபட்ட அரசியார் கொதித்துப் போனார்.

"அன்பே! என்னை கேவலப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவள் இப்படி நடந்து கொண்டாள். இவளுக்கு சரியான தண்டனை கொடுங்கள்!" என்றாள்.

பாணபத்திரரின் குடும்பத்திற்குத் தன் தந்தையார் காலத்தில் கொடுக்கப்பட்ட மரியாதையை மன்னன் அறிவான். எனவே, அக்குடும்பத்திற்கு எதிராக செயற்பட பயந்தான். இருப்பினும் தன் மனைவியை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பாணபத்திரரின் மனைவியைப் பழிவாங்க நினைத்தான்.

அச்சமயத்தில் ஈழநாட்டு பெண் ஒருத்தி இசைக் கலையில் பெரும்புகழ் பெற்றிருந்தாள். எனவே, அவளை அழைத்து வந்து நாட்டில் இசைக்கச்சேரி வைத்தான். கச்சேரி முடிவில், "என்னுடன் போட்டியிட யார் தயார்?" என்றாள்.

அப்படிக் கேட்க வைத்ததும் மன்னர் தான். உடனே மன்னன் பாணபத்திரரின் மனைவியைப் பார்த்து, "அம்மையீர்! நீங்கள் தான் நம் நாட்டின் பெருமையை நிலைநாட்ட முடியும்!" என்றான்.

"பணம், புகழுக்காக இல்லை. நாட்டின் பெருமைக்காக கலந்து கொள்கிறேன்!" என்றார்.

உடனே போட்டியின் திட்டங்களை மன்னன் அறிவித்தான்.

"மூன்று நாட்கள் போட்டி நடைபெறும். நடுவர் தீர்ப்பே இறுதியானது. ஈழநங்கை வெற்றி பெற்றால் அரசவைக் கலைஞராக்கப்படுவார். பாணபத்திரரின் மனைவி தோற்றால் நாடு கடத்தப்படுவார்..." என்றான்.

முதல் நாள் போட்டி தொடங்கியது. ஈழ மங்கையின் இசை அவ்வளவு சிறப்பாக இல்லை என்றாலும் அரசரின் கட்டளைப்படி அவளே சிறந்த இசை வழங்கியதாக அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது நாளும் தீர்ப்பு இப்படியே வழங்கப்பட்டது.

பாணபத்திரரின் மனைவி, மன்னன் தனக்கெதிராக போட்டுள்ள சதித்திட்டம் என்பதை புரிந்து கொண்டு இறைவனிடம் கூறி அழுதாள்.

"இறைவா நீ தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்!" என்று முறையிட்டாள்.

மூன்றாவது நாள் போட்டி தொடங்கியது. திட்டமிட்டபடியே ஈழத்து மங்கை தான் சிறப்பாக இசைத்ததாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது மக்கள் கூட்டத்தில் இருந்து முதியவர் ஒருவர் எழுந்து நின்றார்.

"மன்னா! இந்த எளியவன் சில வார்த்தைகள் பேசலாமா?" என்றார். "பேசுங்கள்!" என்றான் மன்னன்.

"நடுவர்களே... எந்த அடிப்படையில் ஈழமங்கையின் இசை தான் சிறந்தது என்று தீர்ப்பு வழங்கினீர்கள்?" என்றார்.

திடுக்கிட்டனர் நடுவர்கள். முதியவர் ஈழத்து நங்கையின் இசையையும், பாணபத்திரரின் மனைவி இசைத்த இசை இரண்டிற்கும் உள்ள சிறப்புகளையும் குறைகளையும் புட்டு புட்டு வைத்தார்.

"பாணபத்திரரின் மனைவி இத்தனை சிறப்பாக இசைக்க, அவரை எப்படி தோற்றவர் என்று சொன்னீர்கள்?" என்றார் முதியவர். மன்னரின் முகத்தை பார்த்தனர் நடுவர்கள். "நீங்கள் எல்லாம் என்ன நடுவர்கள். மனச்சாட்சிப்படி தீர்ப்பு வழங்காமல் பொய் தீர்ப்பு அளிக்கிறீர்களே...? இது எந்த விதத்தில் நியாயம்?" என்றார் முதியவர்.

"நடுவர்களே... இசைக்கும், இறைவனுக்கும் சம்மந்தம் உண்டு. இசைக்கு அநீதி செய்வதன் மூலம் இறைவனையே அவமதிக்கிறீர்கள். இசைப்பட வாழ்ந்த பாண்டிய மன்னர்கள் எங்கே? வசைபட வாழ்ந்து முன்னோர் பெயருக்கு அவப்பெயரை கொண்டு வரும் இந்தப் பாண்டியன் எங்கே?" என்றார் கிழவர்.

கடும் சினம் கொண்ட மன்னன், "என்னையே குற்றம் சாட்டும் அளவிற்கு உங்களுக்கு என்ன துணிச்சல்? பிடித்து இந்தக் கிழவரை கட்டுங்கள்" என்றான்.

கிழவரைத் தொட்ட காவலர்கள் மின்சாரத்தை தொட்டது போல் கீழே விழுந்தனர். மறுநிமிடம் கிழவரைக் காணவில்லை. கோயில் கிடுகிடுவென நடுங்கியது. அனைவரும் திடுக்கிட்டனர். கிழவர் இருந்த இடத்தில் இறைவன் காட்சியளித்து மறைந்தார்.

அதிர்ச்சியடைந்த ராசராசன் தரையில் விழுந்தான். தன் தவறை மன்னிக்கும்படி வேண்டினான்.

"நீதி தவறி செயற்பட்ட நான் இனி அரியணையில் அமருவதற்கு தகுதி இல்லை. இந்தக் கணமே நான் அரச வாழ்வை துறந்து ஆன்மீக வாழ்விற்குச் செல்கிறேன்!" என்றான்.

தன் மகனிடம் அரச பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஆன்மீகத்தில் ஈடுபட்டான் மன்னன்.

# சுட்டி ஸ்ரார் நியூஸ்

## பறக்கத் தயாராகும் பார்க்கர்!

சூரியனை இதுவரை இல்லாத அளவு மிக நெருக்கத்தில் ஆய்வுசெய்யும் விண்கலத்தை அடுத்த ஆண்டு ஜூலையில் நாசா அனுப்புகிறது. இதற்கு யூகின் பார்க்கர் (Eugene Newman Parker) என்ற விண்வெளி விஞ்ஞானி பெயரை வைத்துள்ளனர். 60 ஆண்டுகளுக்கு முன்னர், சூரியனின் புறப்பரப்புக்கு வெளியே அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆற்றல் மண்டலம் இருப்பதைக் கண்டறிந்தவர், யூகின் பார்க்கர். இதற்கு, சோலார் விண்டு எனப் பெயரிடப்பட்டது. சூரியனின் புறப்பரப்பைவிட, அதைச் சுற்றியுள்ள ஆற்றல் மண்டலம் சூடாக இருப்பது ஏன் என இந்த விண்கலம் ஆய்வு செய்யும்.

## பிரமிட்டுப் பூச்சி மியூசியம்



இந்தியாவிலேயே முதன்முறையாக கோயம்புத்தூரில், 'பூச்சிகள் அருங்காட்சியகம்', கடந்த மார்ச் மாதம் தொடங்கப்பட்டது. கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தில், 22,122 இனங்களைச் சேர்ந்த 84,000 பூச்சிகள், பூச்சிகளின் மாதிரிகள் இடம் பெற்றுள்ளன. 5 கோடி ரூபாய் செலவில் இந்த அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் சென்றால், மறக்காம இங்கே விசிட் பண்ணுங்க ஃப்ரெண்ட்ஸ்!

# விடுகதைகள்

• வானத்தைப் பார்க்கும் சிறகை விரிக்கும். வௌவாலாகிக் குஞ்சு பொரிக்கும். நீரும் அதற்குள்ளே நீராழி மண்டபமும் அதற்குள்ளே காராம் பசு கட்டும் கயிறும் அதற்குள்ளே. அது என்ன?

தென்னை மரம்

• வாயிலிருந்து நூல் எடுப்பேன், மந்திரவாதியல்ல. கிளைக்குக் கிளை தங்குவேன், குரங்கும் அல்ல. வலைவிரித்துப் பதுங்கி இருப்பேன் வேடன் அல்ல. நான் யார்?

சிலந்தி

• வளைந்து வளைந்து போவேன், பாம்பும் அல்ல. வழி நெடுக நீர் உதவுவேன், மழையும் அல்ல. காடு மலை சுற்றி வருவேன், கரடியும் அல்ல. கடலிலே மூழ்கி விடுவேன், மீனும் அல்ல. நான் யார்?

ஆறு

• வட்டப் பூந்தோட்டத்திலே வரிசையாய் மரம் இருக்குது நெட்டை மாப்பிள்ளை எட்டி நடை போடுகிறான் குட்டைப் பெண்ணால் கூட வர முடியவில்லை. அது என்ன?

மணிக்கூண்டுக் கடிகாரம், முட்கள்

நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்

இலங்கையின் ஆட்சி நிர்வாகம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை உலக நாடுகள் மிகத் தெளிவாகக் கண்டுணர்ந்திருக்கும்.

இவ்வாறானதோர் நிலைமை உருவாகியிருப்பது தொடர்பில் உலக நாடுகளின் அழுத்தம் இருக்கின்றபோதிலும் சர்வதேசத்தின் அழுத்தம் என்பது ஒரு காகித எழுத்தேயன்றி வேறில்லை என்ற அடிப்படையில் சர்வதேசத்தின் கருத்துக்களை இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்கப் போவதில்லை என்பது உறுதி.

இலங்கையில் தமிழினம் அழிக்கப்பட்டபோது சர்வதேச சமூகம் தனது அழுத்தத்தை பலமாகப் பிரயோகித்திருந்தால், இன்று இலங்கையின் அரசாட்சி மிக ஒழுங்காக – நேர்த்தியாக நடந்திருக்கும்.

தமிழ் மக்களின் விடயத்தில் அழுத்தம் கொடுப்பதில் சர்வதேச சமூகம் பின்னடித்தது.

இலங்கை அரசிடமிருந்து சில பல சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசின் போக்கை கண்டிக்கவும் தண்டிக்கவும் சர்வதேச சமூகம் மறுத்ததன் காரணமாக இன்று இலங்கையின் ஜனநாயகம் ஆபத்துக்குட்பட்டுள்ளது.

இந்த உண்மையை இப்போதேனும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் எனலாம்.

எதுவாயினும் தமிழின அழிப்பு நடந்த இந்த நாட்டில் மானிடத்தின் மகிமை முழுமையாக இழந்து போயுள்ளது என்பதன் அறிகுறியே பாராளுமன்றத்தில் நடக்கின்ற அநாகரிகச் செயல்களாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் யார் இருந்தாலும் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காதென்பது நிறுதிட்டமான உண்மை.

இதை நாம் கூறும்போது ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக வந்தால் அரசியலைப்புச் சீர்திருத்தம் அரங்கேறும் என்று கூறுவதற்கும் நம் இனத்தில் ஆளில்லாமல் இல்லை.

இவ்வாறு கூறுகின்றவர்களிடம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தைப் பாராளுமன்றத்தில் வைத்துத் தீயிட்டுக் கொளுத்தியது யார் என்று கேட்பதுடன் அந்த விடயத்தை ஒத்திவைக்கலாம்.

இவை ஒருபுறம் இருக்க இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் யார் இருந்தாலும் தமிழர்களுக்கு விடிவும் இல்லை தீர்வும் இல்லை என்பது நிறுதிட்டமாகத் தெரிந்தபோதிலும் இலங்கை ஆயுத முனையில் ஆளப்படுகின்ற நாடாக இருந்துவிடக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

அந்தவகையில் இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நினைப்போடு அவரவர் தத்தம் கடமைகளைச் செய்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

தற்போது பாராளுமன்றத்தில் நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களும் ஜனநாயகத்தை பீடித்துள்ள நோயாகவே நாம் கருத வேண்டும். இந்த நோயைக் கடுமையாக முற்றவிட்டால் ஜனநாயகம் மரணித்துப் போக வாய்ப்புண்டு.

ஜனநாயகத்தின் மரணம் சர்வாதிகாரத்தின் உயிர்ப்பு என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

# ஜனாதிபதியின் விருப்பத்துக்கு ஏற்ப பிரதமரைத் தெரிவு செய்ய முடியாது

## கலாநிதி ஜயம்பதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு உள்ள குழுவில் இருந்துதான் ஜனாதிபதி பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் எனவும், ஜனாதிபதியின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப, அவரை கொண்டு வாருங்கள், இவரைக் கொண்டு வாருங்கள் எனக் கூற முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணியும், பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழொன்றுக்கு அவர் வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு மீண்டும் அரசாங்கமொன்றை அமைக்க சந்தர்ப்பம் கிடைத்தாலும், ரணில் விக்கிரமசிங்கவையோ, கரு ஜெயசூரியவையோ பிரதமர் பதவிக்கு இடமளிப்பதில்லையென்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றதே என அவரிடம் வினவியதற்கே இவ்வாறு பதிலளித்துள்ளார்.

பிரதமர் யார் என்பதை ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. பெரும்பான்மை பலம் உள்ள குழுவினாலேயே பிரதமர் யார் என்பதை தீர்மானம் செய்ய வேண்டும். ஜனாதிபதி தன்னுடைய கட்சியில் அரசாங்கம் அமைப்பதாக இருந்தால் மாத்திரமே அவருக்கு வேண்டியவரை தீர்மானிக்க முடியும்.

இந்தக் காரணங்களினால்தான் நாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என தெரிவித்து வருகின்றோம்.

நிறைவேற்று ஜனாதிபதிகளுக்கு அடுத்த கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

இருப்பினும், அவர் அரசியலமைப்பினூடாக செயற்பட வேண்டியுள்ளார். பெரும்பான்மை பலம் உள்ள கட்சி தீர்மானிக்கும் ஒருவரை ஜனாதிபதி பிரதமராக நியமிக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் யாருக்கு பெரும்பான்மை இருக்கின்றது என்பது தெளிவாகவுள்ளது. இது இவ்வாறிருக்கையில் ஜனாதிபதிக்கு வேண்டிய பிரகாரம் செயற்பட்டால், அது பாரிய சிக்கலை ஏற்படுத்தும்.

இந்த நாட்டின் எல்லா ஜனாதிபதிகளும் தனது விருப்பு வெறுப்புக்களுக்கேற்பவே செயற்பட்டனர்.

நாம் கொண்டுவந்த ஜனாதிபதியும் அவ்வாறு செயற்படுவதானது கவலையளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசியல் நெருக்கடி நிலை காரணமாக எம்.பிக்களுக்கு உயிராபத்து ஏற்படலாம்

## அமைச்சர் அமரவீர எச்சரிக்கை

நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடி காரணமாக அடுத்த சில நாட்களில் ஓரிரு பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு உயிராபத்து ஏற்படலாம் என மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சபாநாயகரே இந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளார் என குறிப்பிட்டுள்ள அவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை சபாநாயகரே ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசமைப்பின்கீழ் பிரதமரை அல்லது அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் சபாநாயகரிற்கு இல்லை எனவும் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கான அதிகாரங்கள் ஜனாதிபதியிடமே உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். சபாநாயகர் நடுநிலையானவர் பக்கச்சார்பற்றவர், அவர் ஜனாதிபதி தெரிவிப்பதை விமர்சிக்க முடியாது எனவும் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போதைய சபாநாயகர் கரு ஜெயசூரிய தனது அதிகாரத்திற்கு அப்பால் சென்று நடவடிக்கைகளை எடுக்கின்றார் எனவும் அமைச்சர் அமரவீர விமர்சித்துள்ளார். (இ-7)

## சிறார்கள் மத்தியில் புதிய வைரஸ் நோய்

### சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தல்

(கொழும்பு)

சிறார்கள் மத்தியில் புதிய வைரஸ் நோய் ஒன்று பரவி வருவதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். இந்த வைரஸ் இன்புளுவன்சா ஏ மற்றும் பி என அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. சிறார் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

குறித்த நோய் தொடர்பான அறிகுறிகளைக் கொண்ட சிறார்களை மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளுக்கு அனுப்ப வேண்டாம் எனத் தெரிவித்துள்ள வைத்தியர்கள், அவர்களை ஓய்வாக இருக்கும் படியும் அறிவுறுத்தியுள்ளனர். (இ-7)

# அரசியல் குழப்ப நிலை தொடர்பில் இந்துக் குருமார் அமைப்பு கவலை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை தொடர்பில் இந்துக் குருமார் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே குறித்த அமைப்பு இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், "கடந்த சில நாட்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் அசாதாரண நிலை தொடர்பில் வேதனையும், அதிருப்தியும் அடைகின்றோம்.

குறிப்பாக மக்களது இறைமையை கையேற்றிருக்கும் சட்டவாக்க நிறுவனமான நாடாளுமன்றத்தில் சர்வதேச மற்றும் உள்ளூர் பார்வையாளர்கள் முன்னிலையில் நடந்தேறிய சம்பவங்களால் தங்கள் மேல் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் தலை குனிந்துள்ளனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத் தில் குளப்பிட்டியிலிருந்து ஆனைக்கோட்டைவரை, மூத்த விநாயகர்கோவில் பிரதேசம், சென்பீற்றஸ் தேவாலயம், நவாலி, வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தோணிக்கல் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் பிரதேசம், மாவிலங்கேணி, அளவக்கை, செம்மண்தீவு, எருவிட்டான், செம்மண்தீவு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018


''உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே''


–மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

# இரண்டாவது டெஸ்ட் போட்டி

# இங்கிலாந்து அணி அபாரம்

## இலங்கை அணி படுதோல்வி





**பல்லேகலயில் நடைபெற்ற 2 ஆவது டெஸ்டில் இலங்கையை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.**

இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பல்லே லயில் நடைபெற்றது. இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 290 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை முதல் இன்னிங்சில் 336 ஓட்டங்கள் குவித்தது. 46 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சை இங்கிலாந்து ஆடியது. அந்த அணி 346 ஓட்டங்களில் 'ஓல்அவுட்' ஆனது. இதனால் இலங்கைக்கு 301 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

301 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் விளையாடிய இலங்கை அணி 4 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்து நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. மேலும் 75 ஓட்டங்கள் தேவை, கைவசம் 3 விக்கெட் என்ற நிலையில் இலங்கை தொடர்ந்து ஆடியது.

மேலும் 17 ஓட்டங்கள் இலங்கை அணி எஞ்சிய 3 விக்கெட்டையும் எளிதில் இழந்தது. இலங்கை அணி 243 ஓட்டங்களில் 'ஓல்அவுட்' ஆனது. இதனால் இங்கிலாந்து 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மத்யூஸ் அதிகபட்சமாக 88 ஓட்டங்கள் எடுத்தார். ஜேக் லீக் 5 விக்கெட்டும், மொயீன் அலி 4 விக்கெட்டும் கைப்பற்றினர்.

இந்த வெற்றி மூலம் இங்கிலாந்து 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. காலியில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி 211 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை அணி தனது சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை இழந்துள்ளது. ஏற்கனவே ஒரு நாள் தொடரையும் 1-3 என்ற கணக்கில் இழந்துள்து. மேலும் ஒரே ஒரு 20 ஓவர் போட்டியிலும் இங்கிலாந்து வெற்றி பெற்று இருந்தது.

இரு அணிகளும் மோதும் 3 ஆம் மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வருகிற 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தொடரும் அவுஸ்திரேலியாவின் சோகம் துவம்சம் செய்தது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்க அணிக்கெதிரான 20 ஓவர் போட்டியில் அவுஸ்திரேலிய அணி பரிதாபமாக 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது.

இதனை தொடர்ந்து கோல்ட் கோஸ்ட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த 20 ஓவர் போட்டியின் முன்னதாகவே மழை பெய்ய ஆரம்பித்தது.

இதனால் ஆட்டம் 10 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற, அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஆரோன் பின்ச் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 10 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 106 ஓட்டங்கள் சேர்த்தது. அவுஸ்திரேலியா சார்பில் ஆன்ட்ரூ டை, கோல்டர் நீல் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தனர்.

இதனை தொடர்ந்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி வீரர்கள் மளமளவென விக்கெட்டுகளை பறிகொடுக்க ஆரம்பித்தனர். பவர் ப்ளே ஓவர்களில் 27 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்த அவுஸ்திரேலியா, 10 ஓவர் முடிவில் 87 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. அவுஸ்திரேலிய அணி சார்பில் மக்ஸ்வெல் மட்டும் 38 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

தென்னாபிரிக்க அணி சார்பில் இங்கிடி, மோரிஸ், பெகுல்க்வாயோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தனர்.

முன்னதாக அவுஸ்திரேலிய அணி தனது கடைசி 6 போட்டிகளிலும் தோற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

## 75 ஆவது ஆண்டு கால்பந்தாட்டம்; ஆனைக்கோட்டை யூனியன் அணி வெற்றி




யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்கு தனித் தனியாக சுற்றுப்போட்டியானது நடத்தப்படுகின்றது.

இதில் ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் லீக் முறையில் இடம்பெற்று வருகின்றன. மழை காரணமாக கடந்த சில நாட்களாக நிறுத்தப்பட்ட இந்தப் போட்டிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனீஸ் அணி மோதியது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணி, 06:03 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26)

## நடப்பு சம்பியனை வெற்றி கொண்டு முன்னிலையை நிரூபித்தது இந்தியா



பெண்களுக்கான 6 ஆவது 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத்தீவில் நடந்து வருகிறது. இதில் கயானாவில் நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் இந்திய அணி, 3 முறை சம்பியனான அவுஸ்திரேலியாவை சந்தித்தது. ஏற்கனவே இரு அணிகளும் அரைஇறுதிக்கு தகுதி பெற்று விட்ட நிலையில் தனது பிரிவில் முதலிடத்தை பிடிப்பது யார்? என்பதற்காக மல்லுக்கட்டின.

'டொஸ்' ஜெயித்த இந்திய அணி பட்டிங்கை தேர்வு செய்தது. இந்திய அணியில் மிதாலி ராஜ், மான்சி ஜோஷி நீக்கப்பட்டு அனுஜா பட்டீல், அருந்ததி ரெட்டி சேர்க்கப்பட்டனர். முதலில் ஆடிய இந்திய அணியின் தொடக்க வீராங்கனை தனியா பாதியா 2 ஓட்டங்களிலும், ரோட்ரிக்ஸ் 6 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தனர்.

3 ஆவது விக்கெட்டுக்கு கப்டன் ஹர்மன்பிரீத் கவுர், மந்தனாவுடன் ஜோடி சேர்ந்தார். இந்த இணை அதிரடியாக ஆடி அணியை சரிவில் இருந்து மீட்டது. 11.5 ஓவர்களில் இந்திய அணி 100 ஓட்டங்களினை எட்டியது. அதிரடியாக விளாசிய ஹர்மன்பிரீத் கவுர் 27 பந்துகளில் 3 பவுண்டரி, 3 சிக்சருடன் 43 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிம்மின்சி பந்து வீச்சில் ராச்சல் ஹானேஸ்சிடம் பிடி கொடுத்து வெளியேறினார். 20 ஓவர்களில் இந்திய அணி 8 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 168 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய அவுஸ்திரேலிய அணி 19.4 ஓவர்களில் 119 ஓட்டங்களில் ஒல்-அவுட் ஆனது. இதனால் இந்திய அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தனது பிரிவில் முதலிடத்தை பிடித்தது. (க)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரிய விற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையக் கொண்டுவரவுள்ள தாக ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகளின் போது சபாநாயகர் பக்கச் சார்பாக நடந்துகொண்டார் என்பதை அடிப்படையாக வைத்தே இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது நாங்கள் ஏனையவிடயங்கள் குறித்து ஆராய்ந்துவருகின்றோம். கூடிய விரைவில் சிறந்த தீர்மானத்துக்கு வருவோம்.

சபாநாயகர் நாடாளுமன்ற நடைமுறைகள் அனைத்தையும் புறக்கணித்துள்ளார். இதன் காரணமாக ஜனாதிபதி சபாநாயகரை நாடாளுமன்ற நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளையும் நாங்கள் நிராகரிப்போம். சபாநாயகர் உரிய முறையில் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்தும் வரை அனைத்து அமர்வுகளையும்நாங்கள் நிராகரிப்போம் என்று ஹெகலி ரம்புக்வெல மேலும் தெரிவித்தார். (மு)

## பாராளுமன்றம்...

குப்பின் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாராளுமன்றம் பெரும் எதிர்பார்ப்புடன் மீண்டும் கூடுகிறது. (மு)

## கேக் வெட்டி...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற சர்வ கட்சி சந்திப்பைத் தொடர்ந்து ஜனா திபதி தலைமையில் மகிந்த ராஜபக்ஷவின் 73 ஆவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. (மு)

## இலத்திரனியல்...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து தான் தீர்மானிக்க வேண்டுமெனில் குறித்த வாக்கெடுப்பானது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை அழைத்தோ அல்லது இலத்திரனியல் முறையிலோ முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சர்வகட்சி தலைவர்களின் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தை மாற்றுவது குறித்து தீர்மானிக்கையில், நிலையியற் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய, குரல் பதிவுக்கமைய பெரும்பான்மையைத் தீர்மானிப்பது உரியது அல்லவென்றும் இதில் வெளிப்படை தன்மை இருக்காது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும்இன்றையதினம்நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் இன்று காலை நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதுடன் பிரச்சினையின்றி இன்றைய அமர்வுகளை முன்னெடுக்க இதன் போது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. (மு)

## இலங்கைக்கு...

யின் இராணுவக்கட்டமைப்புக்காக 39 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அறிவித்தது.

அத்துடன் கடற்படை கப்பல் ஒன்றையும் அமரிக்கா கடந்த ஆகஸ்ட்டில் இலங்கைக்கு வழங்கியது

இந்த நிலையில் தற்போதைய நெருக்கடி நிலையை அமெரிக்கா உன்னிப்பாக நோக்கி வருகிறது என்று அமரிக்க தூதரகத்தின் பேச்சாளர் டேவிட் ஜே மெக்கியூரி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பாராளுமன்றத்தை மைத்திரிபால சிறிசேன கலைத்தமை நியாயமற்ற செயல் என்று அமெரிக்க தூதரகம் கண்டித்திருந்தது.

இந்நிலையில் ஜனநாயகத்தை நிலைநாட்டாவிட்டால், கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் ஜே மெக்கியூரி குறிப்பிட்டுள்ளார். (மு)

## அனைத்து கட்சி கூட்டம்...

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகியது.

சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்ற இந்த சந்திப்பு இணக்கப்பாடின்றி நிறைவு பெற்றுள்ளதாக ஆளும் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

இச் சந்திப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

எனினும், சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அதனை சபாநாயகர் கரு ஜயசூரிய நிராகரித்திருந்தார். அத்துடன், மக்கள் விடுதலை முன்னணியும் ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பை புறக் கணித்தி ருந்தது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி அந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளும் நேற்று கலந்து கொண்டிருந்தனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன் போது ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட தரப்பினரிடம் தெரிவித்திருந்ததாக அமைச்சர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

அவ்வாறு நிலையியற் கட்டளையின் பிரகாரம், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்படுமாயின், அதற்கு ஒத்துழைப்பு வழங்க தாம் தயார் எனவும் இந்த சந்திப்பின் போது மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் தரப்பினர் கூறியதாக விமல் வீரவன்ச குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரனே கருத்துகளை பெருமளவில் முன்வைத்திருந்ததாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை அவர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச இதன்போது குற்றம் சுமத்தியிருந்தார்.

இதேவேளை, 113 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், அவர்களின் ஆதரவுக் கடிதங்களையும் எடுத்துக்கொண்டு, தாம் இன்று காலை ஜனாதிபதி செயலகத்திற்கு வருகைத் தந்து, தமது பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி இந்த சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் கூறியுள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு பின்னர், ஜனாதிபதி செயலக வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் பீ பெரேரா மற்றும் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் இதனைக் குறிப்பிட்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் இவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய பதிலை நேற்றைய சந்திப்பில் வழங்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனினும், இந்த கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று காலை 10 மணிக்கு முன்னர் பதிலொன்றை வழங்குவார் என்ற எதிர்பார்ப்பு தமக்குள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் பீ பெரேரா கூறியிருந்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்றம் மீண்டும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடவுள்ளதுடன், இன்றைய தினம் அமைதியான முறையில் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது அனைத்து கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (மு)

## தமிழருக்கான தீர்வுக்கு இனி...

கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே மோர்னிங்கிற்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசு தோற்றால் பிரதமர் பதவி விலகுவது உலகில் அனைத்து நாடுகளிலும் வழமை. ஆனால் பெரும்பான்மையே இல்லாத மகிந்த ராஜபக்ச சட்டத்திற்கு விரோதமான முறையில் பிரதமராக நியமிக்கப்பட்டார். பிரதமரை இவ்வாறு நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை.

எனினும் அவரால் தனது பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமா என கட்சிகள் பொறுத்திருந்து பார்த்தன. பல பேரம் பேசல்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கான முயற்சி ஆகியவற்றிற்கு பின்னரும் அவரால் பெரும்பான்மையை பெற முடியவில்லை.

கடந்த சில வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் அனைத்தும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன. இன்று உண்மையில் அரசு என்பதேயில்லை. கடந்த 14ஆம் திகதி நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக அமைச்சரவை கலைக்கப்பட்டுவிட்டது என அரசியலமைப்பு தெரிவிக்கின்றது.

தற்போது பலவந்தமாக அதிகாரத்தில் இருப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதுவே தற்போது இடம்பெறுகின்றது. தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காணும் முயற்சிகள் பின்னடைவை சந்திக்குமா என்ற கேள்விக்கு நிச்சயமாக பின்னடைவை சந்திக்கும் என்பதே பதிலாகும்.

அரசியலமைப்பு தொடர்பான நகல்வடிவ ஆவணமொன்றை வெளியிடும் தருணத்தில் நாங்கள் இருந்தவேளையே இந்த குழப்பம் ஏற்பட்டது. அந்த ஆவணம் நவம்பர் ஏழாம் திகதி வெளிவரவிருந்தது. ஆனால் இந்த குழப்பங்கள் 26ஆம் திகதி ஆரம்பித்தன. இதன் காரணமாக அது முழுமையடையவில்லை.

புதிய அரசமைப்பினை ஏற்படுத்தும் முயற்சிகளில் எதிர்காலத்தில் முன்னோக்கி நகர்வதற்கான வாய்புள்ளதாக நான் கருதவில்லை.

எனினும் நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் ஜனாதிபதி செய்ததை ஏற்காத நிலையில் ஜனாதிபதி என்ன விட்டுக்கொடுப்புகளை செய்ய தயார் என்பதை பொறுத்தே இந்த குழப்பநிலை சூழலுக்கான தீர்வு அமையும் என்றார். (மு)

## பண்ணைப் பகு...

யாழ்ப்பாணம் பண்ணை பாலத்தடியில் வெடிமருந்து துண்டுகள் சில மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அங்கு சென்ற பொலிஸார் நான்கு வெடிமருந்து துண்டுகளை மீட்டுள்ளனர்.

மீனவர்களின் படகுகளை நிறுத்திவைக்கும் பகுதியில் மீட்கப்பட்ட குறித்த வெடிமருந்து துண்டுகள், சீ-4 என்ற வகையென்றும், இது மீன்பிடிக்கு பயன்படுத்தப்படுவதில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், எதற்காக குறித்த வெடிமருந்துகள் மறைத்துவைக்கப்பட்டன என்பது தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு)

## வவு.சிறைக்கரு...

னியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சிறைச்சாலைக்கு அருகே காணப்படும் வீதியில் நின்று சிறைச்சாலை வளாகத்தினுள் போதைப்பொருளை வீச முற்பட்ட சமயத்திலே இளைஞனை கைது செய்துள்ளதாகவும் மதகுவைத்தகுளம் பகுதியினை சேர்ந்த மைக்கல் பிரதீப்குமார் என்ற 26 வயதுடைய இளைஞனிடமிருந்தே 540 மில்லிகிராம் ஹெரோயினை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (மு-281)

## கேரதீவு பகுதியில்...

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

நாவாந்துறையைச் சேர்ந்த அன்ரன் சிலுவைதாசன் என்பவருக்கு சொந்தமான படகே இவ்வாறு இனந்தெரியாத நபர்களினால் எரியூட்டப்பட்டுள்ளது.

இந்தப் படகினை நம்பியே வாழ்வாதாரத்தை மேற்கொண்டுவந்த நிலையில், அது எரியூட்டப்பட்டமையால் அவர்களது தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 வருடங்களுக்கு முன்பும் கேரதீவு இறங்குதுறையில் வைத்து 3 படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்கள் திருடப்பட்டிருந்தன. அத்துடன், மீனவர்களின் வள்ளங்கள் தொடர்ச்சியாக சேதமாக்கப்பட்டு வந்தன என்று அப்பகுதி மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மீனவருக்கு இழப்பீட்டினை வழங்க வேண்டும் எனவும் நாவாந்துறை மீனவர்களின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (மு)


கொவிசெத
திகதி 2018.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 1947
H 55 70 73 77

மஹஜன சம்பத
திகதி 2018/11/18
சீட்டிழுப்பு இலக்கம் 3792
V 5 7 8 9 1 9

தன நிதானய
திகதி 2018-11-18
சீட்டிழுப்பு இலக்கம் 77
J 03 32 54 82

நீரோகா
திகதி 2018/11/18
சீட்டிழுப்பு இலக்கம் 474
கடகம் 37 61 62 67 68

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413
(C-4453)


## பேரவை இணைத்...

யாழ்ப்பாணம் கந்தர் மடத்திலுள்ள தமிழ் மக்கள் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், தான் குறித்த பேரவையில் தொடர்ந்தும் இணைத்தலைவர் பதவியை வகிக்க முடியுமா? என மத்தியு குழு கூட்டத்தில் முடிவு செய்து அறிவிக்குமாறு கோரியிருந்தார். அதற்கேற்றவகையில் நேற்றைய கூட்டத்தில் பேரவை உறுப்பினர்கள் பலர் முதலமைச்சர் இந்த பதவியில் தொடர்ந்து இருப்பது காலத்தின் தேவை என வலியுறுத்தியிருந்தனர்.

அதனடிப்படையில் அவர் தொடர்ந்தும் இணைத்தலைவர்களுள் ஒருவராக இருக்க வேண்டுமென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும் குறித்த கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள்சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் என தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினர் கலாநிதி சரவணபவன் தெரிவித்தார். (ம-9)


விசேட இறுதி கருத்தரங்குகள்
செவ்வாய் (20/11) காலை 9.00 மணி
சுங்க பரிசோதகர்
ஆசிரியர் தெரிவு
சகல வினாத்தாள்களுக்கும் உரிய விடயங்கள்
அதிபர் சேவை தரம் – 3
செவ்வாய், வியாழன் பி.ப. 4.30 - 7.30
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்நகர். (C-4459)



IBC தமிழ்

NOBLE INTERNATIONAL
Papera Lanka (Private) Limited

### காகித ஆலைக்கான பணிநிலை வேண்டுகை

யாழ்/ அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள வடக்கின் முதலாவது காகித உற்பத்தி ஆலைக்கு கீழ்க்காணும் பணி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- ★ பேப்பர் கட்டிங் மெசின் இயக்குநர் (Paper Cutting Machine Operator)
- ★ Reel to Sheet Cutting Machine
- ★ Polar Paper Cutting Machine Programming

தகுதியும் அனுபவமும் உடையவர்கள் சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும்

விண்ணப்பமுடிவுத் திகதி: 23.11.2018

அனுப்ப வேண்டிய முகவரி: ஆளணி முகாமையாளர்
நோபிள் இன்ரர்நஷனல் பேப்பர்ஸ்
லங்கா பிரைவேட் லிமிற்ரெட்,
கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலி. (C-4454)



### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு

BAGxxxx எனும் தொடரிலக்க முடைய HERO HONDA Pleasure மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 2525538 (C-4458)


## நெல்லியடி...

பேர் கைது செய்யப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (மு-60)


### விற்பனைக்கு

8 1/2 பரப்பு காணி வீட்டுடன் புலம் வீதி கைதடி மேற்கு, கைதடியில் விற்பனைக்கு உண்டு. நல்லூர் அரச வீதியில் வீட்டுடன் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 617 1397
0041765441822
(6482)



### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



(C-4381)
DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS



### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-4452)


# மரண அறிவித்தல்

## வேதவனம் கந்தையா தருமராஜா

(ஓய்வு நிலை பிரதி அதிபர் – வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளை)



**மலர்வு - 03.08.1938 உதிர்வு - 18.11.2018**

மலேசியாவை பிறப்பிடமாகவும், கரவெட்டி கிழக்கை சொந்த இடமாகவும் கல்வியங்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட வேதனம் கந்தையா தருமராஜா அவர்கள் 18.11.2018 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதவனம் கந்தையா (மலாயன் பென்சனியர்) இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா (நா.வ.கந்தையா அன் சன்ஸ்) அவர்களின் அன்பு மருமகனும், அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, நடராஜா, தியாகராஜா, நாகராஜா, கனகராஜா மற்றும் வடிவாம்பிகையின் அன்புச் சகோதரரும், எழில்குமரன், கிருத்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரணவப்பிரியா, அருட்குமரன், முகுந்தன், கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபாங்கினி, ஸ்ரீபாமா, ஸ்ரீபானு ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், அபயா, லயா, ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2018) செவ்வாய் கிழமை நண்பகல் 12.00 மணி அளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

959, பருத்தித்துறை வீதி, செங்குந்தா மார்க்கற்,
திருநெல்வேலி கிழக்கு, நல்லூர்.

தகவல் : குடும்பத்தினர்
077 538 1880

(6498)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.